செய்திப் பத்திரிகையாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளன வார இதழ்

ஈழத்திருநாட்டு உழைப்பாளரின்
ஒரே உரிமைக் குரல்

"தொழிலாளி"

சந்தா

ஆண்டு சந்தா ரூ. 7-50
ஆறுமாத சந்தா ரூ. 3-75

விபரங்களுக்கு:

மானேஜர்,
"தொழிலாளி"
123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

விலை சதம் 10 ★ இந்தியாவில் 10 நயா பைசா ★ நவம்பர் 8, 1963 ★ பக்கங்கள் 8 மலர் 1 ★ இதழ் 10

# இறுதிவரை நாம் போராடுவோம்!

## வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர் முடிவு

### ஆட்சியாளரின் அநீதியான தொழிலாளர் விரோத நடவடிக்கை

**அடுத்த இதழில்**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் எம். மாணிக்கவாசகரின் விசேஷகட்டுரை வெளி வருகிறது.

வெள்ளவத்தைத் துணி ஆலைத் தொழிலாளர்களின் வீரப்போராட்டம் 4 மாதங்களை எட்டிப் பிடித்து விட்டது.

இப்பகுதி மக்கள், காலைக் கதிரவனின் உதயத்தை ஒலிபரப்பும் ஆலைச் சங்கொலியைக்கேட்டு, 120 நாட்களாகிவிவிட்டன.

2,400 தொழிலாளர்கள், நிர்வாகத்தின் அட்டகாசம், அரசாங்கத்தின் துரோகக் கொள்கை, தொழிலாள கட்சிகளுக்குள் முளைத்த தறுதலைகளின் திரைமறைவுத் தில்லுமுல்லுகள், பின்னணிச் சீர்குலைவுத் திட்டங்கள் ஆகிய சகல எதிர்ப்புகளையும் எதிர்த்துச் சாடி தமதுபோராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் மிகமிகச் சாதாரணமானவை. மற்றைய தொழிலாளப் பகுதியினருக்கு இன்று கிடைத்துவரும் சலுகைகளையே இவர்கள் கோரியுள்ளனர்.

லட்சம் லட்சமாக லாபம் திரட்டித் தந்த ஆலைத்தொழிலாளர்களுக்கு, இக்கோரிக்கைகளை, மிகச் சாதாரண கோரிக்கைகளைக்கூட தரமுடியாதென முரண்டு பிடித்தது நிர்வாகம்.

நிர்வாகத்தை நிர்ப்பந்தித்து கோரிக்கைகளை ஏற்கும்படி செய்ய நாம் பல தடவை ஆட்சியாளரைக் கோரினோம். ஆனால், "மக்களாட்சிக்" கூப்பாடு போடும் ஆட்சியினர், நேரடியாக முதலாளிகள் பக்கம் சேர்ந்தனர்.

சமரஸத்திற்கு வர மறுக்கும் ஆலை நிர்வாகத்தை ஆட்சியினர் பொறுப்பேற்க வேண்டும் என்ற எமது கோரிக்கையையும் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினர் புறக்கணித்தனர்.

இவை மூலம் தமது தொழிலாளர் விரோத, மக்கள் விரோதப் போக்கை அவர்கள் நேரடியாகவே காட்டினர். அதோடு, தமது முதலாளிகள் ஆதரவுக் கொள்கையை பகிரங்கப்படுத்தினர்.

இத்தனை கொடுமைகள் போதாதென்று, 4 மாதங்கள், தாங்கமுடியாத பொருளாதார நெருக்கடிகளினூடே போராட்டத்தை நீடித்து வரும் துணி ஆலைத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை உடைக்க நிர்வாகத்தினர் அனுப்பும் கருங்காலிகளுக்காக, வேலைநிறுத்தப் போராளிகளை போலிஸ் படையினரைக் கொண்டு ஆட்சியினர் தாக்கினர்.

கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் போலிஸ் படையின் அட்டூழியம் சொல்லும் தரமன்று. வெள்ளவத்தை ஆலைப் பகுதியை போலிஸ் பட்டாளத்தினர் ஒரு யுத்த களமாக்கியுள்ளனர்.

நிர்வாகத்தினருக்குத் துணை நின்று, தொழிலாளர்களை மிருகத்தனமாகத் தாக்கப் போலீஸை ஏவும் ஆட்சியினரை வன்மையாகவும், கடுமையாகவும் கண்டிக்கிறோம்.

அடக்குமுறையாலும், பயமுறுத்தல்களாலும் வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் நீதியான, நியாயமான போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதை ஆட்சியாளருக்கும், நிர்வாகத்தினருக்கும் எச்சரிக்கிறோம்.

உறுதியுடனும், கூடுதல் ஐக்கியத்துடனும் ஈழத் திருநாட்டில் என்றுமே நடந்திராத நீண்ட போராட்டத்திற்குவழி காட்டியுள்ள; சரித்திரப் பிரசித்தமிக்க வெள்ளவத்தை வேலைநிறுத்தத்திற்குத் தலைமை தாங்கும் தொழிலாளர்களுக்குப் பேருதவி தரும்படி ஈழமெங்குமுள்ள தொழிலாளர்களை வேண்டிக்கொள்கிறோம்.

வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம் உங்களின் போராட்டமாகும். அதன் வெற்றி, தொழிலாள இயக்க வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்குக் கிட்டும் வெற்றியாகும். அதன் தோல்வி, நம் அனைவரையுமே பாதிக்கக்கூடியது.

எனவே, உடனடியாக உங்கள் பேருதவியை பணத்தின் மூலமோ, மற்றும் பொருட்கள் மூலமோ, வேறு வகைகளிலோ தந்துதவுமாறு வேண்டுகிறோம்.



"மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள் அங்கே—ஆகா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி—கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்" என்று, மகாகவி பாரதியாரால் போற்றிப் புகழப்பட்ட ருஷ்ய நவம்பர் புரட்சியின் தலைவன்—உலகத் தொழிலாள வர்க்கத்தின் தத்துவ ஆசான், தோழர் லெனின், புரட்சி வெற்றி பெற்றபின் தொழிலாள-விவசாய ராணுவ வீரர் கூட்டமொன்றில் பேசிக்கொண்டிருக்கும் காட்சி.
(நவம்பர் புரட்சி ஞாபகார்த்தக் கட்டுரை உள்ளே பிரசுரமாகியுள்ளது)

# 'தேசாபிமானி'யே தொழிலாளிகளைக் காட்டிக் கொடுப்பவர் கையிலா சிக்கினாய்!

சென்ற வார 'தொழிலாளி' தலையங்கத்தில் நமது மதிப்புக்குரிய ஆசிரியர் தோழர் எச். எம். பி. மொஹிதீன், தேசாபிமானியில் நாம் பணியாற்றிய தன்மை பற்றி நினைவு கூர்ந்து உள்ளத்தை உருக்கும் முறையில் எழுதியதை வாசித்த பொழுது எமது கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று.

தேசாபிமானி ஆசிரியர் குழுவிலிருந்து முதலாளித்துவ பிற்போக்காளர் கூட நடந்து கொள்ளாத அராஜக முறையில் எம்மை நீக்கியது குறித்து நாம் மனம் வருந்தவில்லை. நாங்கள் அனைவரும் இந்தநாட்டுத் தொழிலாள வர்க்கத்துக்குச் செய்யும் பணியில், தேசாபிமானி வேலையையும் ஒரு பகுதியாகக் கொண்டு, அதன் வளர்ச்சிக்கு எமது முயற்சியனைத்தையும் அளித்தோம்.

வேறெந்தக் கட்சிப் பத்திரிகையும் செயல் படாத முறையில் நாம் ஒழுங்காக, வாரா வாரம் கூடிப் பத்திரிகையின் வளர்ச்சி பற்றி விவாதித்தோம்; கட்சி நெறியை மக்கள் மத்தியில் பரப்பும் கருவியாக அதை மாற்றுவதற்கு நாம் மிகவும் பிரயாசைப் பட்டோம். தேசாபிமானியின் வளர்ச்சிக்கு இரவு பகல் உழைத்தோம். பல தோழர்கள் தமது தொழில்களை விட்டு விட்டு வந்து பணி புரிந்தனர்.

எங்களின் அயரா தொண்டின் போது, வெளியே பிற்

## முன்னை நாள் 'தேசாபிமானி' ஆசிரியர்க் குழு பெரும்பான்மையினரின் அறிக்கை

போக்கு வாதிகளை எதிர்த்துப் போராடவேண்டிய நேரத்தில், நாம் உள்ளேயும் போராட வேண்டியிருந்தது. உதாரணமாக, தமிழரசாரின் 'சத்தியாக்கிரகப் போராட்டத்தின்' போது, ''அது மக்கள் போராட்டம்'' என்றும், ''எனது பேனா இப்போராட்டத்தை எதிர்த்து எழுதுவதற்கு இயங்காது'' எனவும் கூறிய எழுத்தாளப் பிரகிருதி எங்கள் குழுவில் இருந்தார். இவரோடு, சிறுகதை எழுதி, அதைப் பிரசுரிப்பதையே வாழ்வின்கைங்கரிமமாக, கட்சியைவிடமேலான லட்சியமாகக் கொண்ட எழுத்தாளரும், தொழிலாள வர்க்கத்தைக்குறைத்து மதிப்பிட்டு அவர்களின் போராட்டங்களை கிண்டல் செய்து கீழ்த்தரமாகத் தாக்கிய ஞான பண்டிதர்களும், எழுதாத எழுத்தாளர்களும், தேசாபிமானிக்கு ஒரு துரும்பைக் கூடத் தூக்காத பேர்வழிகளும் இருந்தனா. ஆடிக்கொருமுறை ஆவணிக்கொருமுறை வந்த இவர்களுடனும் நாம் இடைவிடாது போராட்டம் நடத்தினோம்.

எங்களை ஒர பட்சமாகவும், அநியாயமாகவும், காரணமற்றும் நீக்கியபின், அக்டோபர் 7-ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் பீட்டர் கெனமன் குறிப்பிட்ட வார்த்தைகள் எமது நினைவிற்கு வருகின்றன:

''தேசாபிமானியைப் பொறுத்த வரையில் எதுவித குற்றச்சாட்டுமே கிடையாது. தேசாபிமானி ஆசிரியர் குழுவில் கடமை பார்த்த தோழர்கள் கட்சிக்கு முரண்பட்ட விதத்தில் எதுமே செய்யவில்லை, அவர்கள் கட்சிக் கட்டுக்கோப்புக்குள் செயல் பட்டிருக்கின்றனர். தோழர் எச். எம். பி. மொஹிதீனைப் பொறுத்த வரையில் எதுவித குற்றச்சாட்டும் கிடையாது. தேசாபிமானி தோழர்கள் தமது கடமையைச் செவ்வனே செய்ததற்காக நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.''

இத்தகைய ஒழுங்கான தோழர்களை ஏன் நீக்க வேண்டும் என்ற கேள்வி கேட்கப் பட்டபொழுது, தோழர் கெனமன் கூறினார்: ''கருத்து வேறுபாடுகளைக் கொண்டுள்ளவர்களை வைத்திருத்தல் கூடாது என்பது மத்தியக் கமிட்டியின் தீர்மானம், அவ்வளவுதான்.''

நாம் தொழிலாள வர்க்க நலனுக்கும், கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்காகவும் போரிட்டோம். எமது உயிரினும் மேலாம் உயிர் எனக் கருதிய கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு இது சகிக்க முடியவில்லை. எமது நெடுநாளைய உழைப்பையெல்லாம் ஒரு நொடிப்பொழுதில் உதறி எறிந்து, எங்களின் அபிப்பிராயத்தைக் கூடக் கேட்காது வெளியேற்றி, சர்வாதிகாரம் நடத்

(7-ம் பக்கம் பார்க்க)

## புத்துலகப் புரட்சி




'கலி யுகம் வீழ்த்தி, கிருத யுகம் தோற்றிய யுகப் புரட்சி' - அக்டோபர் பெரும் புரட்சி வெற்றி வாகை சூடி 46 ஆண்டுகள்.

மானிட வரலாற்றிலே இது மிக மிகச் சிறிய காலம்.

ஆனால், இந்த சொற்ப காலத்திலே, அக்கிரமம் அழித்து, அநியாயம் ஒழித்து, மானிடத்தின் மகத்தான வெற்றிக்கு வித்திட்ட இவ் அகிலப் புரட்சியின் சாதனைகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளில் நடக்க முடியாதவை.

உலகப் புரட்சியின் ஊற்றுக் கண்ணான மகோன்னத அக்டோபர் புரட்சி, சோஷலிஸத்தை நடைமுறையாக்கியது.

தனது வாழ்நாளில் தடைகளையும், முடைகளையும் சாடிச் சரித்துவிட்டு, வெற்றி முழக்கத்துடன் உலகத்து முதலாளித்துவ சக்திகளுக்கு ஒரு சவாலாக, எச்சரிக்கையாக சோவியத் நாடு முன் சென்றது.

புது யுகப் புரட்சிக்கு வித்திட்டவர் மனித மாமேதை லெனின். அதைச் கட்டிக் காத்து, வளர்த்து, வளம்பெறச் செய்தவர், தரணிக்கோர் புதுமையாய்த் திகழ்ந்த தங்க நிகர்த் தலைவன் அமரர் ஸ்டாலின்.

புரட்சியில் பிறந்த உழைப்போர் ஆட்சி, பிறந்த நாள்முதல் எதிர்ப்புக்கும், எத்தர் கூட்டத்தின் ஏளனத்திற்கும், சீர்குலைவாளர்களின் சதிகளுக்கும், சீர்திருத்த வாதிகளின் கண்டனத்திற்கும் பலியாகியது.

ஆனால், தோழர் லெனினும், பின் ஸ்டாலினும் தந்த பிசகற்ற உறுதிமிக்க மார்க்ஸிய - லெனினிஸப் பாதை, புரட்சியில் பூத்த புத்துலகப் பொன்னரசை வெற்றி மார்க்கத்தில், கம்யூனிஸ ராஜபாட்டையில் இட்டுச் சென்றது.

தரணியின் கற்பகத் தருவான தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் ஸ்டாலினதும் தலைமையின் கீழ் சோவியத் நாடு, 'உலகுக்கோர் புதுமை ஒப்பற்ற சமுதாயம்' படைத்தது.

பொற்புறு வாழ்வில் திளைத்த சோவியத் பெருங்குடி மக்களிடையே புதிய மானுடன்-சோஷலிஸ மனிதன் தோன்றினான்.

கலையிலே புதுமை; கல்வியிலே புரட்சி; கலாச்சாரத் துறையிலே மறுமலர்ச்சி; பொருளாதாரத்திலே 'ராக்கட்' பாய்ச்சல்; விஞ்ஞானத்திலே சிறப்புறு சாதனைகள் - சோவியத் மனிதன் வளர்ச்சிப் பாதையில் விரைந்தான்.

ருஷ்யப் புரட்சியின் மாட்சி, ஊரெலாம் உலகெலாம் பல்கிப் பரவியது.

சோவியத் நாட்டினதும், தோழர் ஸ்டாலினதும் அமர நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில், ஏகாதிபத்தியவாதிகள் நிலைகலங்கினர்.

உலகெங்கணும் புரட்சிப் புயல் வீசிற்று. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், சீனத்தில், கொரியாவில், வியட்நாமில் - மக்களாட்சி மலர்ந்தது. அக்டோர்பர் புரட்சியின் ஆதர்ஸம், புரட்சிகர வளர்ச்சி சகல நாடுகளுக்குமே ஊக்கமும் ஆக்கமும் தந்தது.

சோவியத் நாட்டின் குரல் அடிமைத் தளையறுக்கும் சக்ராயுதமாகத் திகழ்ந்தது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை, விடுதலைப் போராளிகளின் இதயகீதமாக நாதமீட்டியது.

ஸ்டாலின் நாமம், உலகத்துப் பாட்டாளிகளின் இதயத் துடிப்பாக, உயிர் மூச்சாக இருந்தது,

ஆனால். இன்று...

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதத் தலைமை புரட்சியைக் கண்டு ஓட்டமெடுக்கிறது; அடிமைத் தளையறுக்க முரசுகொட்டும் விடுதலைப் போராளிகளின் சுதந்திரப் போர்க்குரல் கேட்டு நடுங்கிச்சாகிறது. ''சிறு போராட்டம் கூட வேண்டாம்; அது உலக யுத்தத்திற்கு அடிகோலும்'' என்று பிரலாபிக்கிறது.

சமாதான சகஜீவனம் என்ற கூற்றிலே, கியுபாவிலே, வியட்நாமிலே, கொரியாவிலே, ஜப்பானிலே இன்னும் உலகெலாம் அடிமைத்தளை பரப்ப அதிஅக்கிரமங்கள் செய்யும் ஏகாதிபத்தியங்களின் தலைமை உருவான அமெரிக்காவை கட்டிப்பிடித்து சல்லாபிக்கிறது; சரஸமாடுகின்றது.

சுருக்கமாகச் சொன்னால், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய திரிபுவாதத் தலைமை உலகப் புரட்சிக்கு வித்திட்ட ''வாகான தோள் புடைத்தார், வானமரர்'' கூட்டமான சோவியத் மக்களின் புரட்சிப் பரம்பரைக்கு, போராட்ட கீர்த்திக்கு நீங்காத பழியை, மாருத, அபகீர்த்தியைத் தேடித் தந்துவிட்டது.

ஆனால், உலகெங்குமுள்ள உண்மையான மார்க்ஸிஸ்டுகள், லெனினிஸ்டுகள் அக்டோபர் புரட்சியின் அடிச்சுவட்டிலே, ஆதர்ஸத்திலே, வெளிச்சத்திலே முன்னேறுகிறார்கள்.

இந்தப் பேரணியில், மகோன்னத வெற்றிப் பட்டாளத்தில் நாமும் இணைவோமாக!

சத்தியம் சாவதில்லை; அசத்தியம் வாழ்வதுமில்லை.

புத்தகத் தடைகளாலும், பிரசுரக் கட்டுப்பாடுகளாலும், வாய்ப்பூட்டுகளாலும், மார்க்ஸிஸத்தின்-லெனினிஸத்தின் வளர்ச்சியை நிறுத்திவிட முடியாது.

அகிலத்துப் புரட்சியின் ஆதர்ஸம் வாழி!

யுகப் புரட்சியின் வெற்றிப் பாதை வாழி!




## வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவு

### தலவாக்கொல்லைத் தொழிலாளர்கள் முடிவு

இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (செங்கொடிச் சங்கம்) தலவாக்கொல்லை மாவட்டப் பிரதிநிதி தோழர் ரொசாரியோ பெர்ணந்து வெளியிட்டுள்ள அறிக்கையை இங்கு பிரசுரித்துள்ளோம்.

நமது தாய்ச்சங்கமாகிய இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தில் இணைந்துள்ள வெள்ளவத்தை கொழும்பு ஆலைத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து கடந்த ஜூலை மாதம் 10ந்திகதி வேலை நிறுத்தத்தில் இறங்கினர். சுமார் 2,400 தொழிலாளர்கள் மிகத் துணிச்சலுடன் கடந்த மூன்று மாதத்துக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்கின்றனர். எனினும் ஆலை முதலாளிமார் பிடிவாதத்துடன் ஒரு முடிவுக்கு வர மறுத்து வருகின்றனர்.

4 மாதத்துக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்வதென்றால் அது இலேசான காரியமல்ல. எனினும் திடசித்தத்துடன் இந்த மிகப் பெரிய வேலைநிறுத்தத்தை நடத்திவரும் வீரம் மிகுந்த இந்தத் தொழிலாளிகளின் கோரிக்கைகள் வெற்றிபெற வேண்டுமானால் அதற்கு மலை நாட்டுத் தொழிலாளர்களாகிய நமது உதவி அவசியம் தேவை. மேலும் இந்த வேலை நிறுத்தத்தில் நாம் அவர்களுக்கு கூடிய உதவி செய்ய முன் வருகிறோம்.

நமது தலவாக்கொல்லை ஜில்லா இவர்களுக்கு ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் ஒரு இருத்தலோ முடிந்தால் 2 இருத்தலோ தேயிலைத் தூள் சேகரித்து அனுப்ப முடிவு செய்துள்ளது. அத்துடன் இவர்களுக்கு ஆதரவு அளிக்குமுகமாக ஒரு நாள் அனுதாப வேலை நிறுத்தம் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

தலவாக்கொல்லையில்

# செங்கொடிச் சங்கத்தின் வெற்றி விழா

## வளரும் இயக்கத்திற்கு பெருகும் பேராதரவு

தலவாக்கொல்லையைச் சேர்ந்த அன்ட்ராசம் பழையகாடு தோட்டத்தில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தோட்டக்கமிட்டித் தேர்தல்கூட்டம் மாவட்ட உப தலைவர் திரு. எம் முத்துசாமி தலைமையி அண்மையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதன் முதலாக உரையாற்றிய 'தொழிலாளி' பத்திரிகையின் ஆசிரியர் குழு அங்கத்தவர் தோழர் ஏ. ராமநாதன் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் தாய்ச்சங்கமானஇலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் கொழும்பிலுள்ள அதன் அங்கத்தினர்களுக்கு இதுவரை எடுத்துக் கொடுத்துள்ள பிரமாண்டமான, வெற்றிகளையும் அதே நேரத்தில் திருவாளர்கள் தொண்டமான், அஸீஸ் போன்றவர்கள் தோட்டத் தொழிலாளர்களை இது காலவரை ஏமாற்றிக்கொண்டுவந்த கொடுமைகளையும் விரிவாக விளக்கிக் கூறினர். அடுத்து ்பசிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க நிர்வாகக் காரியதரிசி ஈ. டி. மூர்த்தி, 'தோட்டத் தொழிலாளியின் நாட் சம்பளத்தில் ஒரு ரூபா கூட்டித்தர வேண்டும், அல்லது அவனது மாதச் சம்பளத்தில் 30 ரூபா கூட்டப்பட வேண்டும் என்று இ. தோ. தொ. சங்கம் உட்பட இலங்கையிலுள்ள முழு தொழிற் சங்க இயக்கமும் கேட்கின்ற வேளையில், இ.ஜ.தொ.கா. தலைவரான திரு, அஸீஸ் தோட்டத் தொழிலாளிக்கு பஞ்சப்படியான 17 ரூபா 50 சதம் தரவேண்டும் என்ற தனிப்பட்ட குரலெழுப்பி வருகிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸோ இச் சம்பள உயர்வுபற்றியும் மற்றும் இதனுடன் சேர்ந்த 20 கோரிக்கைகள் சம்பந்தமாகவும் இலங்கையிலுள்ள முழு தொழிற் சங்க இயக்கங்களும் சேர்ந்து அண்மையில் கொழும்பில் நடத்திய கூட்டத்திற்கு பிரபல்யமாகாத, யாருக்கும் தெரியாத ஒருவரை தனது பிரதிநிதியாக அனுப்பிவைத்தது: இதன்மூலம் தொழிலாளியின் மேற்கூறப்பட்ட சம்பள உயர்வுக்கு அது எதுவித முக்கியத்துவமும் கொடுக்க விரும்பவில்லை யென்பதைக் காட்டிக் கொண்டதென்று கூறினர்.

''ஆனால் தோட்டத்தொழிலாளி இனிமேலும் திரு. தொண்டமானினதும், திரு. அஸீஸினதும் பேச்சை நம்பி ஏமாறாது, அவர்களை இழுத்துப்பிடித்து தங்களது வழிக்குக் கொண்டுவந்து, தங்களது தினச் சம்பளத்தில் ஒரு ரூபா உயர்த்தி எடுக்க அவர்கள் எல்லாவித முயற்சிகளையும் எடுக்கவேண்டும்.' என்று திரு. மூர்த்தி அழுத்தந் திருத்தமாகக் கூறிமுடித்தார்.

'இந்நாட்டிலுள்ள மற்றைய தொழிலாளர்களுக்கு பத்துசீட்டு என்று ஒன்று இல்லையென்றும், ஆனால் தோட்டத் தொழிலாளிக்கு ஒரு அவமானச் சின்னம்போல் இந்த பத்து சீட்டு முறை இருந்துவருகிறதென்றும்,இந்த அவக்கேடான பத்துசீட்டு முறையை ஒழிக்க தோட்டத் தொழிலாளர் திரண்டெழுந்து போராட வேண்டுமென்று' இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். நடேசன் கேட்டுக் கொண்டார்.

''அன்ட்ராசம் பழைய காடு அதாவது ஹொலிருடு என்ற ஆங்கிலத்திலே அழைக்கப்படும் இந்த குரூப்பைச் சேர்ந்த பணிய கல்பா என்ற தோட்டத்திலிருந்து முதன் முதலாக சுமார் 17 பேர் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்திலே அங்கத்தினர்களாகச் சேர்ந்து இயங்கிவந்தபோது தோட்டத்துரை திரு. பீட்டர் ஈனஸ் அவர்களை ஓடஓட விரட்டினர். அவர்களது பிரதிநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்தார். ஆனால் அந்த 17 பேரில் 1/2 காம்பராவொன்றில் தனது குடும்பத்தினருடன் கேவலமான வாழ்க்கை நடத்திய பாலையா என்ற தொழிலாளியொருவர் வேலை நிறுத்தம் செய்யப்பட்டு பின்னர் இ. தோ. தொ. சங்கத்தின் அயராத முயற்சியால் முழுக் காம்பரா பெற்று வெற்றியுடன் வேலைக்கு திரும்பியது கண்டு அந்த பணிய கல்பா தோட்டத்திலிருந்து மேலும் 175க்கு அதிகமானோர் இ.தோ. தொ. சங்கத்திலே அங்கத்தினர்களாயினர். அதைத் தொடர்ந்து இந்த பழைய காட்டிலேயுள்ள சுமார் 500க்கு அதிகமானோர் நமது சங்கத்திலே அங்கத்தினர்களாக சேர்ந்தனர். நிலைமை இப்படியாக மாறி தொழிலாளியின் பலம் அதிகரித்தது கண்ட தோட்டத்துரை, அன்று 17 பேரை ஓட ஓட விரட்டிய, அவர்களது பிரதிநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்த மறுத்த அதே துரை அவர்களது பிரதிநிதியை தானாகவே கிளப்பிற்கு வரவழைத்து 'இப்பொழுது நான் புது துரையாகவே மாறிவிட்டேன்; முன்பு போல் பிடிவாதம் பிடிக்காமல் இனிமேல் உங்கள் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை நாம் அவ்வப்பொழுது டெலிபோனிலோ, நேரிலோ கலந்துபேசித் தீர்த்துக்கொள்வோம்' என்று கூறினர். ஆதலால் தொழிலாளி மட்டும் ஒன்றுதிரண்டுவிட்டால் எதையும் சாதிக்கமுடியும்.''

இவ்வாறு மாவட்டப் பிரதிநிதி திரு. ரொசாரியோ முழங்கிய பொழுது கூட்டத்தினர் பலத்த கரகோஷமிட்டனர். தலவாக்கொலை மாவட்டத்திலேயே துணிச்சல்காரர்கள் என்று அழைக்கப்படும் இத் தோட்டத் தொழிலாளர்கள் கொட்டும் மழையைக்கூட சிறிதேனும் சட்டைசெய்யாது கடைசிவரை நின்று கூட்டத்தைச் சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் மற்றும் அட்டன் ஜில்லாப் பிரதிநிதி திரு. பி. சத்தியவேல், கிழக்கு ஜெர்மனியில் இரண்டுவருடம் தொழிற் சங்கம்பற்றி பயின்ற அட்டன் ஜில்லா உப பிரதிநிதி திரு. ஓ. ஏ. ராமையா, இலங்கைத் தொழிற் சங்க சம்மேளன தலைமைக் காரியாலயத்திலே முழு நேர ஊழியராகக் கடமையாற்றும் தோழர் எம்.சி.எம். சாபி ஆகியோரும் பேசினர்.

பின்னர் கீழ்க்காணும் தோட்டக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது:

தலைவர்:
ஆர், கோவிந்தன்

உப தலைவர்:
அலகமலை

காரியதரிசி·
பீ. பழனி

உப காரியதரிசி:
கே. ஆர். ரெங்கசாமி

பொருளாளர்:
எம். துரைசாமி

கலக்டர்:
எம். கந்தையா

உதவிகலக்டர்:
எ. கந்தசாமி

கமிட்டித்தலைவர்:
எஸ். ராமசாமி

கமிட்டிகள் :

1 எ. கருப்பன்
2 சைமன்
3 வீ. காளிமுத்து
4 கே. சின்னையா
5 எஸ். காளி
6 5வது ராமசாமி
7 கே. அருணசலம்
8 7வது ராமசாமி
9 எம். நாகமுத்து
10 கோ. வீரசாமி
11 எம். கந்தையா
12 கே. பெருமாள்
13 எஸ். எம். ராமசாமி
14 ஆர். பெருமாள்
15 இராசேந்திரன்

தொண்டர் தலைவர்கள் :

தொண்டர் காப்டன்:
சின்னையா
தொண்டர் தலைவர்:
எம். அரியவன்
தொண்டர் உப தலைவர்:
நயினார்

தொண்டர்கள்:

1 எஸ். கிட்ணசாமி
2 ஆர். எம். செல்லையா
3 கே. வீரையா
4 பீ. பழனிமுத்து
5 பீ. கே. பரமசிவன்
6 என். வேலு
7 ஆர். சின்னையா
8 கே. ஜெபமாலை
9 பீ. மாரிமுத்து
10 ஏ. மாரிமுத்து
11 ஞானசேகரம்
12 எஸ். சுப்பிரமணியம்
13 கருப்பையா
14 மோசநாயகம்
15 கோவிந்தசாமி
16 எம். வெள்ளிமலை
17 பீ. பிச்சை
18 முருகன்
19 ரெங்கசாமி
20 பீ. வேலு
21 ராகூரான் ரெங்கராஜ்
22 கந்தசாமி

# பேக் ஹவுஸ் ஹோட்டல் தொழிலாளர்களின் வெற்றி!

## மூன்று வருட பாக்கிச் சம்பளம் கிடைத்தது

இலங்கை ஹோட்டல், பேக்கரி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த, பேக் ஹவுஸ் ஹோட்டல் தொழிலாளர்களுக்கு, நிர்வாகத்தினர் சம்பள நிர்ணய சபையின் சட்டப்படி வாரத்திற்கு ஒன்றரை நாள் விடுமுறை தராதிருந்தனர்.

இது சம்பந்தமாக எமது ஹோட்டல், பேக்கரி தொழிலாளர் சங்கம் தொழிற் கோர்டில் நடவடிக்கை எடுத்தது.

இதையொட்டி அண்மையில் தொழில் கந்தோரில் நிர்வாகத்தினருடன் நடைபெற்ற மாநாட்டில், சங்கத்தின் செயலாளர் தோழர் எம். எம். செனிவரத்தினவும், பேக் ஹவுஸ் தொழிலாளர்களின் தலைவர் தோழர் எச். எம். அந்தோனிஸவும் கலந்து கொண்டனர்.

இம் மாநாட்டின் விளைவாக பேக் ஹவுஸ் தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு ஒன்றரை நாள் விடுமுறை தருவதாக நிர்வாகத்தினர் ஏற்றுக்கொண்டதுடன், கடந்த மூன்று ஆண்டுகாலமும் பிரதி வாரமும் ஒன்றரை நாள் வேலை செய்ததற்குரிய பாக்கிச் சம்பளத்தைத் தரவும் சம்மதித்தனர். தொழிலாளர்களின் அ. ஆ. இ. தரப் பிரிவுகளையும் நிர்வாகத்தினர் ஏற்றனர்,

பேக் ஹவுஸ் ஹோட்டல் தொழிலாளர்களின் இவ் வெற்றி, இலங்கை எங்குமுள்ள ஹோட்டல் தொழிலாளர்களுக்கு உற்சாகமும், உத்வேகமும் தருவதாகும்.

★

அக்டோபர் புரட்சி

# நாம் பெறும் படிப்பினை என்

★ குடிமக்கள் சொன்னபடி குடி வாழ்வு மேன்மையுறக் குடிமை நீதிவழங்கி, கலியுகம் வீழ்த்தி, கிருத யுகம் தோற்றிய உலகத்து யுகப் புரட்சி–அக்டோபர் பெரும் புரட்சி தந்த படிப்பினைகளை, இன்றைய சூழ்நிலைக்கொப்ப ஈழத்து வாசகர்களுக்கு தந்துள்ளோம். ★

அக்டோபர் புரட்சி, உலகில் முதல் முதலாக தொழிலாளிகளும் விவசாயிகளும் வெற்றிபெற்ற புரட்சியாகும். அன்றுதான் முதன் முதலாக தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆட்சியைக் கைப்பற்றி, முதலாளிகளும் நிலப் பிரபுக்களும் இல்லாத ஓர் சமுதாயத்தை உருவாக்கினர். இது சரித்திர பிரசித்திபெற்ற ஓர் சம்பவம். அதுபோல் வேறொரு நிகழ்ச்சி இதற்கு முன் ஏற்பட்டதில்லை. அன்றுவரை சோஷலிஸம் என்பது ஏடுகளில் மட்டுமே காணக்கிடந்தது. மார்க்ஸினதும் ஏங்கல்ஸினதும் சிந்தனைகள் அப்போதுதான் மாமேதை லெனினினால் செயல்படுத்தப் பட்டது. முதல் பாட்டாளி வர்க்க அரசு தோன்றிற்று. அக்டோபர் புரட்சியின் உலகப் பிரசித்தம் இதில்தான் உள்ளது, உலகம் பூராவும் உள்ள தொழிலாளிவர்க்கத்திற்கு இச் சம்பவம்திடகாத்திரமான நம்பிக்கையையும் உற்சாகத்தையும் கொடுத்தது.

ருஷ்ய தொழிலாளி விவசாயிகளுக்கு இத்தகைய வெற்றியீட்டக்கூடிய சாத்தியப்பாடுகள் எப்படி ஏற்பட்டன? இந்த வெற்றிக்கு, உள்நாட்டு நிலைமையும், வெளிநாட்டு நிலைமையும் காரணமாகவிருந்தன.

## முதலாவது

முதலாவதாக, அக்டோபர் புரட்சி ஆரம்பித்த கட்டத்தில் முக்கியமான ஏகாதிபத்தியக் கும்பல்களான, ஆங்கிலேய, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கும், ஆஸ்திரிய–ஜெர்மனி ஏகாதிபத்தியத்திற்குமிடையே பிளவுகளும், போட்டிகளும் கணக்கிலடங்காதிருந்தன. இதன் காரணமாக இளம் சோவியத் குடியரசுக்கெதிராக, இந்தநாடுகள் ஒன்று சேர்ந்து சதி செய்ய முடியாது போயிற்று. அக்டோபர் புரட்சி வெற்றியடைய இது ஓர் குறிப்பிடத்தக்க காரணமாக இருந்தது ஏனெனில், இந்தப் பிளவுகளைத் தனக்குச் சாதகமாக்கி, தனது சக்திகளை ஒன்று திரட்டவும் வலுப்படுத்தவும் அக்டோபர் புரட்சியின் சக்திகளுக்கு முடிந்தது.

லெனின் கூறியதுபோல் ''ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்கள் இந்தப் போராட்டத்தில் (முதலாவது உலக யுத்தம்) அவ்வளவுதூரம் ஈடுபட்டிருந்தமையால், இவர்கள் எவராலும், ருஷ்யப் புரட்சிக்கு எதிராக குறிப்பிடத்தக்க அளவிற்கு தலையிட முடியாது போயிற்று,''

## இரண்டாவது

இரண்டாவதாக, ஏகாதிபத்திய யுத்தம் நடந்து கொண்டிருந்த வேளையில், அக்டோபர் புரட்சி நடைபெற்றது. யுத்தத்தின் கொடுமைகளை மேலும் சகிக்க முடியாத நிலையில் இருந்த தொழிலாளர்களும், விவசாயிகளும், சமாதான தாகம் கொண்டிருந்தனர். இந்த யுத்தத்திலிருந்து தம்மை விடுவிக்க, பாட்டாளி வர்க்கப் புரட்சியே ஒரே ஒரு வழி என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். இந்த நிலைமை அக்டோபர் புரட்சிக்கு மிகவும் முக்கியமான, சாதகமான ஓர் நிலை. சமாதானத்திற்கான சிறந்த ஆயுதம் இப்புரட்சியின்



கையில் இருந்தது. சோவியத் புரட்சியின் வெற்றி மக்களால் வெறுக்கப்பட்ட யுத்தத்திற்கு முடிவுகட்ட முடியும் என்ற நம்பிக்கையில், மேற்கு நாடுகளின் தொழிலாளர்களையும் கிழக்கு நாடுகளின் சுரண்டப்பட்ட மக்களையும் புரட்சியின் நண்பர்களாக்கிற்று

## மூன்றுவது:

மூன்றுவதாக, ஐரோப்பாவில் பலம் வாய்ந்த தொழிலாளி வர்க்க இயக்கம் இருந்தது. மேற்கிலும், கிழக்கிலும் ஏகாதிபத்திய யுத்தம் நீடித்தால் மக்கள் மத்தியில் அதிருப்தியும், ஏகாதிபத்தியத்திற்கு நெருக்கடிகளும், புரட்சிகர இயக்கங்களின்வளர்ச்சியும் துரிதப்பட்டு வந்தது. இதன் காரணமாக, ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் புரட்சிக்கு சாதகமான சக்திகளை, ருஷ்யாவிற்கு வெளியே உருவாக்க முடிந்தது. சோவி குடியரசிற்கு எதிரான நடவடிக்கைகளில். ஏகாதிபத்தியத்தை முறியடிக்க சோவியத் மக்களின் தீரச்சாதனைகளுக்கு, உறுதுணையான சக்திகள் இவை. ஏகாதிபத்தியத்தின் தோல்விக்கு சோவியத் மக்களும், வெளி நாடுகளிலுள்ள நேச சக்திகளும் காரணமாக விருந்தன. வெளிநாடுகளில் புரட்சிக்குச் சாதகமான சூழ்நிலைகள் இருந்தது போலவே, உள்நாட்டில் இருந்த சாதகமான சூழ்நிலைகளையும் சற்று கவனிப்போம்.

முதலாவநாக, அக்டோபர் புரட்சிக்கு ருஷ்ய தேசத்தின் தொழிலாளி வர்க்கத்தின் அதிகப்படியான ஆதரவு இருந்தது இத்தகைய ஏகோபித்த ஆதரவு தொழிலாளர்கள் மத்தியில் இல்லாதிருந்தால் புரட்சி வெற்றி பெறுவதற்கு முடியாது. எந்த ஒரு சோஷலிஸப் புரட்சியாவது வெற்றிபெறுவதற்கு அதிகப்படியான தொழிலாளர்களின் ஆதரவு அவசியம் தேவை.

## தவறுன தலைமை

இரண்டாவதாக அதிகப்படியான ஏழை விவசாய மக்களும் அதிகப்படியான போர் வீரர்களும் சமாதானத்தை விரும்பியவர்கள் உழுபவனுக்கு நிலம் சொந்தமாவதை ஆவலுடன் எதிர்பார்த்தவர்கள். ஆதலால், இவர்களும் புரட்சியை ஏகமனதாக ஆதரித்தனர். தொழிலாளி, விவசாயி ஐக்கியம்தான் ருஷ்யப் புரட்சியின் அத்திவாரமாக அமைந்தது. குறிப்பாக தொழிலாளி வர்க்கம் சிறுபான்மையாக இருந்த நாட்டில் இத்தகைய ஐக்கியம் இருந்திருக்காவிட்டில் புரட்சிவெற்றிபெற்றிருக்க முடியாது. 1905ம் ஆண்டு ருஷ்யப் புரட்சியும் 1871ல் பாரிஸ் கம்யூனும் தோல்வியடைந்ததற்கு மூலகாரணம் தொழிலாளி, விவசாயி ஐக்கியத்தை ஏற்படுத்தி, தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் போராடத் தவறியதே.

**நா. சண்முகதாசன்**

## சரியான தலைமை

மூன்றுவதாக, புரட்சிக்குத் தலைமை தாங்கியவர்கள், வழிகாட்டியவர்கள், புடம்போட்டெடுக்கப்பட்ட பொல்ஷிவிக் கட்சியும் அதன் தலைமையில் இருந்த சிறந்த அறிவாளியான மாமேதை லெனினும் என்பது குறிப்பிடத்தக்கது. பலவருட அனுபவம் பெற்ற, கட்டுப்பாடுள்ள உழைக்கும் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஓர் சக்தி மிக்க கட்சியை லெனின் உருவாக்குவதில் வெற்றி கண்டிராவிடில், கிடைத்த அளவு வெற்றி புரட்சியின் மூலம் கிட்டிராது. எந்த ஒரு புரட்சியும் வெற்றி பெறுவதற்கு, கட்டுப்பாடுள்ள, நன்ருக அணிதிரட்டப்பட்ட, புரட்சிகரத் தலைமை ஒன்று மிகமிக அவசியம்.

நான்காவதாக, புரட்சியின் வைரிகள் பலம் குறைந்தவர்களாக இருந்தார்கள்; அனுபவமற்றவர்களாக இருந்தார்கள். அதனுல் அவர்களை வெல்வது சுலபமாயிற்று. ஒருபுறம் மிக திறமையுடன் அணிதிரட்டப்பட்ட திடகாத்திரமான புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம், மறுபுறம் பலம் குறைந்த, முன்னேற்றமடையாத பூர்ஷுவா. (முதலாளி) வர்க்கம் இந்த சூழ்நிலை புரட்சி வெற்றிபெற உதவியது இயற்கையே.

ஐந்தாவதாக, புரட்சி செய்வதற்கு அந்த நாட்டில் நிலப் பிரதேசம் வசதியுள்ளதாக பரந்து கிடந்தது. பல பகுதிகளில் வெளிப்படையாக வேலை செய்ய முடிந்தது. தேவைப் பட்டபோது ஒளிந்து மறைந்திருக்க வசதியான இடங்கள் இருந்தன. பதுங்கிக் காத்திருக்கவும், சக்திகளைப் பலப்படுத்தவும், மறுபடி தாக்கவும் பரந்த பிரதேசமானதாய் வசதிகள் இருந்தன. இத்தகைய பரந்த பிரதேசமான ருஷ்யாவில் முதலில் புரட்சி வெற்றிப்பெற்றதற்கு இந்நாட்டின் விஸ்தாரமும் ஒரு காரணமாகும்.

ஆறுவதாக, எதிர்ப் புரட்சிக்குமாறுன போராட்டத்தில் அக்டோபர் புரட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு நாட்டினுள் போதியளவு உணவு, எண்ணை, மூலப்பொருள்கள் ஆகியவை கிடைக்கக்கூடியதாக இருந்தது. தமது பொருளாதாரத்தை எவருடைய உதவியுமின்றி விருத்தி செய்வதற்கு போதிய மூலப்பொருள்கள் அங்கு கிடந்தன. பயன்படுத்தப்படாத ஏராளமான நிலங்களும், மூலப் பொருள்களும் மிகவும் பிரயோசனமாக இருந்தன. இத்தகைய சூழ்நிலை தேசீய ரீதியிலும் சர்வதேசீய ரீதியிலும் எற்பட்டது புரட்சியின் வெற்றிக்கு உதவியது.

ஆனுல், புரட்சிக்குப் பாதகமான நிலைமைகளும் இருக்கத்தான் செய்தன. ருஷ்ய தேசத்தில் எல்லைப் பிரதேசங்களில், இன்றிருப்பது போல் சோஷலிஸ நண்பர்கள் எவரும் இல்லை. ருஷ்ய பாட்டாளி வர்க்கம், ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் இருந்ததுபோல் பலம் மிக்கவர்களாய் இருக்கவில்லை. இக்குறைபாடுகள் இருந்ததன் காரணமாக புரட்சிக்கான முயற்சிகளில் தீவிர உழைப்பையும், விடா முயற்சியையும், ருஷ்யத் தோழர்கள் கடைப்பிடித்தனர்.

## ஆரம்பம்

## உலகப் புரட்சியின்

ஸ்டாலின் கூறியது போல் ''அக்டோபர் புரட்சி, ஏகாதிபத்தியத்தின் ஏகபோகத்தை முறியடிப்பதில் ஒரு நாட்டில் ஆரம்பித்த பெரும் முயற்சி. ஏகாதிபத்திய நாடுகளின் மத்தியில் ஏற்பட்ட முதல் சோஷலிஸ நாடு. அதுமட்டுமல்ல, இப்புரட்சி உலகப் புரட்சியின் முதற்படி; உலகப் புரட்சியின் வளர்ச்சிக்கு ஓர் மாபெரும் அத்திவாரம். அக்டோபர் புரட்சியின் சர்வதேசீய முக்கியத்துவத்தை உணராதவர்கள், இது வெறும் ருஷ்யப் புரட்சி என்று நினைப்பவர்கள் பெரும் தவறு செய்கின்றனர்.''

முதல் முதல் வெற்றிபெற்ற பாட்டாளி வர்க்க அரசின் கடமைகளை லெனின் தெளிவாக உணர்ந்திருந்தார். புரட்சியைப்பற்றி லெனின் கூறியது போல், ''முதலாளித்துவத்தின் வேறுபட்ட வளர்ச்சியின் காரணமாக குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் தனி ஒரு புரட்சி வெற்றிபெற முடியும் என்ற போதிலும், அது அந்த நாட்டிற்கு மட்டும் புறம்பான செயல் அல்ல. ஒருநாட்டில் வெற்றிபெற்ற புரட்சி அந்த நாட்டிற்கு மட்டும் சொந்தமென்று எண்ணக்கூடாது. மாறுக, அப்புரட்சி உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியைத் துரிதப்படுத்தும் ஓர் தூண்டுகோலாக, உதவியாக அமைகிறது.

''வேறுபட்ட அரசியல், பொருளாதார வளர்ச்சி, முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத நியதி, ஆதலால்,ஒருசில முதலாளித்துவ நாடுகளிலோ. அல்லது ஒரு தனி நாட்டிலோ, சோஷலிஸம் முதலில் வெற்றிபெற முடியும். வெற்றி பெற்ற அந்த நாட்டின் பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ பொருளாதாரத்தை முறியடித்து, சோஷலிஸ பொருளாதாரத்தை ஸ்தாபித்து, உலகம் முழுவதற்குமோர் உதாரணமாக, ஏனைய நாடுகளில் உள்ள சுரண்டப்படும் மக்களை தனது பாதையில் ஆகர்சித்து, அந்தந்த நாட்டு முதலாளிகளுக் கெதிரான பேராட்டங்களைத்தூண்டிவிட்டு, அவசியமேற்பட்டால் தனது ஆயுதபலத்தையும் இராணுவ பலத்தைதையும் கொடுத்துதவும்'' என்று கூறினுர் மாமேதை லெனின்.

## புரட்சிவாதி லெனின்

இன்று லெனினை ஓர் சாதுவென்றும், சமாதான சகஜீவனக் கொள்கையில் மட்டும் மூழ்கிக் கிடப்பவர் என்றும் கூற முயலும் திரிபுவாதிகளை மேற் கூறிய வாக்கியங்கள் அதிர்ச்சியடையச் செய்யும். மங்கிப்போன அவர்கள் மூளைக்குச் சிந்தனையைக் கொடுக்கும். ஆனுல் லெனின், புரட்சி வெற்றிபெற வேண்டிய அவசியத்தை உணராமலில்லை: ஒளித்து மறைத்து எதையும் கூற முன்வரவில்லை. 'வேறு நாடுகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களைப் புரட்சி செய்யத் தூண்டுவதும், அவசியமேற்பட்டால் அவர்களைச் சுரண்டும் வர்க்கங்களை ஒழித்துக்கட்ட ஆயுதப் படை உதவி செய்வதும் வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் கடமை' என்று அவர் உணர்ந்தார். லெனின் சதா காலமும் புரட்சிவாதியாக வாழ்ந்தார். உலகப் புரட்சிக்குத் தன்னை அர்ப்பணித்தார்.

1924-ம் ஆண்டில், அக்டோபர் புரட்சி உலகம்

## தத்துவ ... வி

உங்கள் கவனத்தி

அண்மையில் இ
பத்து மத்திய
லாள அனுபந்தத்தை
சீனக் கம்யூனிஸ்ட்கட்

பிரசித்த இந் நூ
லும் தமிழ் வாசகர்க

எனவே, பல
இந்நூலின் தமிழாக்க

உங்கள் பிரதிகள்


# ன்ன?

புரட்சியின் ஆரம்பம் என்று ஸ்டாலின் கூறினர். அவர் மேலும் கூறியதாவது, 'ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிந்திருக்கும் நாடுகள் பல புரட்சி செய்வதன் மூலம் உலகப் புரட்சி தொடரலாம். அவ்வேளையில் இந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கத்திற்கு, ஏகாதிபத்திய நாடுகளின்



## வ விளக்கம்

பாட்டாளி வர்க்கம் உறுதுணையாக நின்று உதவி புரியும், இந்த விளக்கம் சரியானதென்று நிரூபிக்கப்பட்டு விட்டது. உலகின் மூன்றிலொரு பகுதியில் புரட்சி வெற்றிபெற்றுவிட்டது. உலகப் புரட்சியின் அடித்தளம் பலம் பெற்று விட்டது. முதலாளித்துவ நாடுகளிலுள்ள சர்வதேசியத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலும் காலனி, அரைக் காலனி நாடுகளின் தேசிய விடுதலை இயக்கங்களிலும் உலகப் புரட்சிக்கு உறுதுணையான, நம்பிக்கையான படையாளிகள் உள்ளனர். அக்டோபர் புரட்சியின் 46வது ஆண்டு விழாவை நாம் கொண்டாடும் போது லெனின் கனவு கண்ட உலகப் புரட்சி நனவாகும் சாத்தியக்கூறுகள் என்றையும் விட, நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது. இந்த மகோன்னத சாதனைக்காக எம்மை நாம் அர்ப்பணிப்போம்.



## புரட்சிகரத் தோழருக்குப் புலவன் ஆஞ்ஞை

- தான்தோன்றிக் கவிராயர் -

ஈழத்துத் தொழிலாள வர்க்கத் திரே!
ஈடேதும் இணையேதும் இல்லாக் காதை;
வாழத், தம் நாடுயர, உமதே போன்ற
வர்க்கத் தோர்–தொழிலாளர்–உருசியத்தில்,
தோழமையில் இணை நின்றே கிளர்ச்சி செய்து
துரைத் தனத்தார் வர்க்கத்தைத் தொலைத்தே; நாட்டை
ஆளத் தம் அரசினையே நிறுவிக்கொண்ட
அருங் காதை; அக்டோபர் புரட்சிக் காதை;

வீர மிகும் வியன் காதை; விளம்பக் கேண்மின்!
விழிப்படைந்த சோவியத்தின் உழைக்கும் வர்க்கத்
தீரர் எலாம் லெனின் என்னும் திறலோன் கீழே
திரண்டெழுந்தார்; ஜார் என்னும் கொடுங்கோல் மன்னன்
சீரழிந்து செருக்கிழந்து வீழ்ந்தான்; ஆயின்
சிலர் அவனின் சிண் ஆனர்; கபட வேட
தாரர் அவர் ஜார் இருந்த இடத்தைப் பற்றித்
தலையெடுத்தார்; நிலை கெடுத்தார்; தாமுங் கெட்டார்!

இடையாட்சிக் கெடு மதியோர் இழைக்கும் தீமை
இடுக்கண் எலாம் கண்டுணர்ந்தே, ஜாரின் மாற்றுக்
கடையாட்சித் துரைத் தனத்தைக் கடிதில் வீழ்த்தக்
கங்கணம் கொண்டெழுந்தே, தம் கரத்தில் வல்ல
படை ஏந்திப் பாட்டாளித் தோழர் கூடி,
படிப்பாளி லெனின் முதலாம் தலைவர் மாட்டு
விடை ஏந்தி யுகப் புரட்சி விளைத்தார்; தீங்கை
வீழ்த்தி, உயர் சமதர்மம் விதைத்தார் ஆங்கே!

''காலம் இனும் கனிவதற்குள் புரட்சி செய்யக்
கருதுவது தவறெ''ன்றே கதைகள் கூறி,
''சாலவுமே சிறந்த வழி தேர்தல் மூலம்
சாடுவதே'' எனச் சளப்பிக் குழப்பிப் பேசி
ஓலமிட்ட கமினேவை, சினவீவ் மற்றும்
உதிரிகளைப் புறம் ஒதுக்கி, லெனினும் ஸ்டாலின்
போலமைந்த புரட்சிகர வீரர் தாமும்
புகன்ற வழி இயன் றுழைத்தோர் ''போர், போர்'' என்றார்!

மாநகராம் மாஸ்கோவில், பெட்ரோ கிராடில்
மக்கள் குழாம் லெனின் வகுத்த மார்க்கம் சார்ந்து,
''வானகத்தை மண்ணகத்தில் வனைவோம்'' என்றார்;
வளர் புரட்சிக் கனல் கண்ட வல்லோன், ''மேலும்
ஏனடக்கம்? இது தருணம்; எழுவோம்! வாரீர்!''
எனக் கிளர்த்திப் புறப்பட்டான்; இரண்டே நாளில்
போன இடம் தெரியாமல் கரன்ஸ்கிக் கும்பல்
பொடிப் பொடியாய் நீறுகிப் பொசுங்கிற்றுங்கே!

கரன்ஸ்கியுடன் ரெட்சியங்கோ முதலாம் பேரின்
கடைகெட்ட ஆட்சியினர், ஜேர்மன் தேசப்
பரங்கியரைப் பெட்ரோகிராட் நகரின் ஆட்சிப்
பாலனத்தில் அமர்த்துதற்காய்ப் படைத்தார் சூழ்ச்சி;
இரங்கு நிலை, தாயகம் அந் நியர் கைப்பட்டே
இழியு நிலை, அழியு நிலை கண்டார்; ''சிச்சீ!
குரங்கிடமா மலர்த்தோட்டம் விடுவோம்?'' என்றார்;
கொதித்தெழுந்தார்; உதித்தெழுந்த துழைப்போராட்சி!

குடியானோர், தொழிலாளர், சேனை வீரர்
கூடி அமர் விளைப்பதற்குக் குழுமிச் சேர்ந்த
கொடியின் கீழ்–ஆமாம்! செங் கோடியின் கீழே,
குடி மக்கள் சம்மதத்தின் மேலே, கொள்கைப்
பிடி மிகுந்த அடிதவருப் பீடே சான்ற
பிழை இழையாப் பொதுவுடைமைக் கட்சிப் பீடம்,
குடியரசை நிறுவிற்று, தொழிலோர் ஆட்சி
குவலயத்தில் முகிழ்க்க வழி குறிக்கும் சான்றாய்!

சோவியத்தின் இரண்டாம் காங் கிரசும் கூடி,
சுதந்திரத்தைப் பறிகொடுத்தே அடிமைப்பட்ட
பாவிகளாய்க் கிடந்துழன்ற பஞ்சைக் கூட்டப்
பாட்டாளி வர்க்கத்தார், பயன்கள் யாவும்
மேவி அடைந் துய்திடு மா றவர்க்கே காணி,
வீடு, பயிர், விளை வனைத்தும் விநியோ கிக்க,
யாவினுமே அனைவருமே சமமே யானர்;
யாங்கணுமே தீங்கொழிந் தோங் கியதே நாடும்!

பாசிசத்தால், பாராளு மன்றத் தாட்சிப்
பம்மாத்தால் பாரனைத்தும் பங்கிட்டாண்டோர்,
மாசிழைத் தன் றுருசியத்தை–தனித்தே நின்ற
மக்கள் குடியரசான தொழிலோர் நாட்டை–
தேசிழக்கச் செய முயன்றும், தீரன் ஸ்டாலின்
திருத் தொண்டால் வல்லரசாய்த் தேறிற் றுமால்;
நாசிறக்கும் எவர்க்கேனும் நல்லோன் அன்னன்
நாமத்தை ஒரு தடவை நவின்று ரென்றால்!

பதவியினை அவன் பின்னால் வகித்த தன்றிப்
பாட்டாளி புரட்சி மனப் பான்மைச் சக்திக்
குதவியினை நல்கிடும் ஓர் உணர்வே இல்லார்,
உடல் ஒளித்தும், படம் ஒளித்தும், ஒதுக்கி வைத்தும்,
சதமெனவே தொழிலாளர் புரட்சி நெஞ்சைச்
சார்ந்தவனின் நினைவழித்தல் சாலும் கொல்லோ?
முதனிருந்த உருசியத்தின் புரட்சிப் பாங்கை
முழுவுலகும் தொழிலரசின் முறையாய்க் கொள்க!

உலகனைத்தும் உருசியத்தின் பழம் போர்க் கீதம்
ஓங்கி ஒலித் துழைப்பாளர் உயர்ந்தே, ஆட்சிக்
குலமெனவே தலையெடுத் திவ் வையம் ஒரே
குடைக் கீழே–சமதர்மக் கொடியின் கீழே–
இலகிடுமா றெங்கெங்கும் புரட்சிக் கொள்கை
எழுக! நம தெழில் நாட்டில் இருக்கும் வீரத்
திலக மணித் தொழிலாளத் தெய்வத்தீர்! எம்
தேசத்தும் உமதாட்சி திகழச் செய்வீர்!

கட்டுரை-2

## மார்க்ஸிய உலகில் மூன்றுவது பெரும் விவாதம்

மார்க்ஸிஸத்தை சிங்கள மொழியில் விளக்கிச் சொல்வதில், ஈழத்திருநாட்டிலேயே வல்லவர் என்று சகலராலும் ஏற்றிப்போற்றப் படும் தோழர் பிரேமலால் குமாரசிரி, கம்யூனிஸ உலகில் உருவெடுத்துள்ள திரிபுவாதக் கொள்கைக்கு இக்கட்டுரைத் தொடரில் பதிலிறுக்கிறார். இது இரண்டாவது கட்டுரையாகும்.

# யாருடன் சகஜீவனம்?

### பொய்க் கூற்று

நாசகார உலக யுத்தம் ஒன்று ஆரம்பமாயின்–அதன் மூலம் உலக ஜனத்தொகையில் அரைவாசிப் பேர் மாண்டுவிடுவர், மற்றுமுள்ள அரைவாசி ஜனத்தொகையினரை வைத்து நாங்கள் முன்னிருந்ததைவிட மிகவும் சிறந்ததொரு நாகரீகத்தைக் கட்டியெழுப் புவோம் எனச் சீனக் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர் எனச் சிலரால் குற்றச் சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

மானிடப் பிணங்களின்மேல் கட்டியெழுப்பப்படும் நாகரீகம் எப்படிப்பட்டது என அவர்கள் கேட்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டு முழுக்க முழுக்க மக்களைஏமாற்றுவதற்காகஎழுப்பப்பட்டதாகும். அதோடு பச்சைப் பொய்யுமாகும்.

சீனக் கம்யூனிஸ்டுகள் எங்குமே இந்தக் கருத்தை வெளியிட்ட துகிடையாது. அப்படிக் கூறியதாகவுள்ள இடத்தைக் குறித்துக் காட்டும்படி நான் எந்த நபருக்கும் சவால் விடுவதற்குத் தயாராயிருககிறேன்.

### சீனத் தோழர்கள் கூறியதென்ன?

சீனக் கம்யூனிஸ்டுகள் கூறியதாவது:

சோஷலிஸ முகாம் எக்காலத்திலும் உலக யுத்தமொன்றை ஆரம்பிக்காது. ஏகாதிபத்தியவாதிகள் யுத்தமொன்றை ஆரம்பிப்பதை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம். ஆனல் ஏகாதிபத்தியவாதிகள் யுத்தமொன்றை ஆரம்பிப்பார்களா, இல்லையா என்பதை தீர்மானிப்பது நாங்களல்ல இன்று ஏகாதிபத்தியவாதிகள் யுத்தமொன்றை ஆரம்பிக்குமளவுக்கு எழுச்சி கொள்வார்களேயாயின், மரணத்தை நோக்கும் பபத்தியக்காரத்தனமான ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பார்களாயின், அதன் மூலம் உலக மக்களுக்கு பெரும்பாலான நாசத்தை ஏற்படுத்தினலுங் கூட, அந்த யுத்தத்தின் முடிவின் பிரதிபலனயிருப்பது ஏகாதிபத்தியம் நிர்மூலமாக்கப்பட்டு ஒழிக்கப்படுவதாகும். வெற்றி வாகை சூடும் மக்களின் சக்தி ஏகாதிபத்திய மரணப் படுகுழியின் மேல் மிக மிகச் சொற்ப காலத்தில் முதலாளித்துவ அமைப்பைவிட ஆயிரம் மடங்கு மேலான சிறப்புமிகு நாகரீக அமைப்பை ஏற்படுத்த முடியும்'' என்று சீனத் தோழர்கள் கூறியதை சிலர் வேண்டுமென்றே திரித்துக் கூறிவருகிறார்கள்.

### அற்புத சாதனை

சீனக் கம்யூனிஸ்டுகள் சமாதான சகஜீவனத்திற்கு எதிரானவர்கள் என்பது மற்றுமொரு குற்றச்சாட்டாகும். இதன் உண்மை என்ன? வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுடன் சமாதான சகஜீவன வாழ்வு நடத்துவதற்கு சீன எதிர்ப்புடையதல்ல. உண்மையாகவே பஞ்ச சீலக் கொள்கையின் அடிப்படையைக் கொண்ட சமாதான சகஜீவன முறையை நடை முறைக்குக் கொண்டுவர முன்னணிக்கு வந்தது சீன மக்கள் குடியரசாகும். சோஷலிஸ நாடுகள் முதலாளித்துவ நாடுகளுடன் சமாதான சகஜீவன வாழ்வு நடத்தும் கொள்கையைச் சீன எல்லாச்சமயங்களிலும் செயல்படுத்தியுள்ளது. அதன் பிரகாரம் சீன நேபாளம், பர்மா, பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற தனது அயல் நாடுகளோடு, ஏகாதிபத்திய வாதிகளால் சிருஷ்டிக்கப்பட்டு மீதம் வைக்கப்பட்டு குளறுபடியான நிலைகளை மிகவும் சமாதான முறையில் தீர்த்துள்ளது. ஏகாதிபத்தியவாதிகளினதும், வேறு சிலரினதும் உபதேசங்களின் மேல் ஆக்கிரமிப்புக் காரியங்களில் ஈடுபட்ட இந்தியாவுடன், சரித்திரத்தில் எக்காலத்திலும் நிரந்தரமாகவே பிரித்து வேறுபடுத்தபடா எல்லை சம்பந்தமாக ஒரு மோதுதல் ஏற்பட்டதும். தங்களது தேசப்பாதுகாப்பை பலப்படுத்துமுகமாகப் பாதுகாப்புப் போராட்டத்தைத் நடத்திய சீன மக்கள் குடியரசு, தனது இராணுவப் படை வெற்றி முரசு கொட்டி முன்னேறிச் செல்லும் போது தனது சொந்த விருப்பத்தின் பேரில் சுயமாகத் தனது முடிவின்படியே போராட்டத்தை நிறுத்தி, வாபஸ் பெறவில்லையா? இத்தகைய அற்புத காரியத்தைச் செய்த ஏ ாவது ஒரு நாட்டை சரித்திரத்தில் காணமுடியுமா?

உங்கள் கவனத்திற்கு

## லெனினிஸம்நீடு வாழி!

அண்மையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிவெளியிட்ட அறிக்கையிலும், அதற்குஎதிராக பத்து மத்தியக்கமிட்டி அங்கத்தவர்கள் வெளியிட்டுள்ள பதில் அறிக்கையிலும் (தொழிலாளி அனுபந்தத்தைப் பார்க்கவும்) உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் பல அறிக்கைகளிலும், சீனக் கம்யூனிஸ்ட்கட்சிவெளியிட்ட 'லெனினிஸம் நீடு வாழி' என்ற நூல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரசித்த இந் நூலைப் பற்றிப் பல அறிக்கைகளும், தீர்மானங்களும் குறிப்பிட்டிருந்த போதிலும், தமிழ் வாசகர்கள் இந் நூலைப் படிக்கும் வாய்ப்பினை இது நாள்வரை பெறவில்லை.

எனவே, பல தொழிலாளத் தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்த வாரம் இந் நூலின் தமிழாக்கத்தை சிறுபகுதிகளாக வெளியிட நாம் தீர்மானித்துள்ளோம்.

உங்கள் பிரதிகள் தவறுது கிட்ட உடனடியாக சந்தாதாரராகச் சேருங்கள். ஆசிரியர்

# வாட்ஸன் பெர்ணுந்துவின்

## தியாகம் செறிந்த அரசியல் வாழ்வுக்கு விழா!

## காட்டிக்கொடுக்கும் பழைய 'தியாகிகளுக்கு' சாட்டை!

"சிலர் பழைய, கடந்துபோன தமது தொழிற் சங்க ரிக்கார்டு களைக் கொண்டு தொழிலாளர் களை ஏமாற்றப் பார்க்கிருர்கள். இவர்களின் கடந்த காலத்தோடு, இன்றைய வாழ்வினை ஒப்பிட்டால், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தைக் காண்போம். தொழிலாளர்களின், சாதாரண பாமர மக்களின் தலைவர்களாக ஏழ்மை வாழ்வு நடத்திய இவர்கள், ஏழ்மையை மறந்து ரொம்ப ரொம்ப காலமாய் விட்டது. தொழிலாளர்களின் தோழர்களாக வாழ்ந்ததாகக் கூறிக்கொண்டு, இன்று தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை உடைக்க 'குணசிங்கா' வேலை நடத்துவதுடன், சமீப காலமாக நேரடிக் கழுத்தறுப்பிலும் இறங்கியுள்ளார்கள்'':

கடந்த புதன்கிழமை தோழர் கே. ஏ சமரபாலாவின் தலைமையில் நடைபெற்ற, கடந்த 20 வருட காலமாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்திலும் முழு நேர ஊழியராகக் கடமையாற்றிய, இன்றும் கடமையாற்றி வரும் தோழர் வாட்ஸன் பெர்ணுந்துவின் 25 ஆண்டு அரசியல் வாழ்வு பூர்த்தி விழாக் கூட்டத்தில், தோழர் வாட்ஸன் பெர்ணுந்து நன்றி கூறிப்பேசும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் தோழர் வாட்ஸன் பெர்ணுந்து குறிப்பிட்டதாவது:

"20 ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்கப் பாதிரியாகிச் செல்லும் பாதைக்கு என் பெற்ரோர்கள் வழிகாட்டினர். ஆனல், தோழர் லெனின் எனக்கு கம்யூனிஸ்டாக திசை காட்டினர். நான் கம்யூனிஸ்டானேன். தொழிலாளர்களுடன் 20 ஆண்டுகளுக்கு முன் எங்ஙனம் ஒன்ருகக் கலந்து வாழ்ந்தேனே, அதே கம்யூனிஸ்டாகவே நான் இன்றும் வாழ்கிறேன். அன்று முதல் இன்று வரை அவர்களுக்கே வாழ்ந்து வருகிறேன். சில தலைவர்களைப் போன்று அவர்களை மறந்து, அவர்களின் போராட்டங்களையும், துன்ப துயரங்களையும் உதாசீனம் செய்துவிட்டு நான் உல்லாச வாழ்வு நடத்தவில்லை. தொழிலாளர்களோடு தொடர்ந்து நான் வாழ்வேன்; எனது கடைசி மூச்சு இருக்கும் வரை என்



உடல் அவர்களுக்காகவே வாழும் எனது கடைசி மூச்சும் அவர்களின் அமர நாமத்தை, உச்சாடனம்செய்து துதிபாடிக்கொண்டே நீங்கும்'' என்று பிரமாண்ட கரகோஷத்திற்கிடையே குறிப்பிட்டார்.

சி. டி. யூ. எப். பொதுச்செயலாளர் தோழர் என். சண்முகதாசன் பேசுகையில், தோழர் வாட்ஸன் பெர்ணுந்துவின் தியாக வாழ்க்கை ஒவ்வொரு சிறந்த கம்யூனிஸ்டுக்கும் வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்காகும் என்ருர்.

தேயிலை, ரப்பர் மற்றும் பொதுப் பொருள் தொழிற் சங்கச் செயலாளர் தோழர் ஏ. ஜெயசூரியா பேசுகையில், உண்மையான கம்யூனிஸ்ட் நிகழ் காலத்தில் தொழிலாளர்களின் கழுத்தை அறுத்துக் கொண்டு, தனது சென்ற கால தொழிலாளர் பணிபற்றி பீத்திக் கொள்ளமாட்டார். உயிர் போகும் வரை அவன் தொழிலாளர் தோழனுக வாழ்வான். தோழர் வாட்ஸன் சென்ற காலத்தோடு தனது தியாக வாழ்வை நிறுத்திக் கொள்ளவில்லை. இன்றும் தொடர்கிருர். அவர் நீண்டு வாழ்ந்து பணி புரிய வாழ்த்துகிறேன் என்ருர்.

முது பெரும் தொழிலாளர் சார்லிஸ் ஹாமியுடன் மற்றும் பலரும் இவ்விழாவில் பேசினர்.

### செங்கொடிச் சங்க தலைவர் வாழ்த்து

#### உங்கள் படையாளி

இந்நாட்டில் பாட்டாளிப் பெருங்குடி மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கும் பத்திரிகை ஒன்றே ஒன்றுதானிருக்கின்றது. அதுவே நமது "தொழிலாளி".

சமீப காலத்தில் பொது மக்களிடையே ஒரு புதிய ஆர்வத்தை இப்பத்திரிகை உண்டு பண்ணியிருப்பது யாவரும் அறிந்ததே. இன்று 'தொழிலாளி' வாரப் பத்திரிகையாக வெளிவருகிறது. அதுமட்டுமல்ல, 'தொழிலாளி' பிரபல தமிழ் எழுத்தாளர் தோழர் எச். எம். பி. மொஹிதீன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவருவதை வாசகர்கள் நிச்சயம் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

பாட்டாளி மக்களுக்கு முன்னேற்றப் பாதையை காண்பிக்கவே அது தோன்றியிருக்கின்றது. புரட்சிகரமான வழியைக் காட்டி, பாட்டாளிக்கு புத்துணர்ச்சியூட்ட பத்திரிகை தவருது என்றே சொல்ல வேண்டும். இதன் முழக்கங் கேட்டு முதலாளிமார் நடுங்க வேண்டும்; தொழிலாளிகள் மகிழ்வுற வேண்டும். 'தொழிலாளி' பாட்டாளி மக்களுக்கு பெரும் பணியாற்றும் என்பது நிச்சயம்.

—எஸ். நடேசன்.

## சட்ட விரோத மத்தியக் கமிட்டியின் தீர்மானங்களை நிராகரிக்கிருேம்

### கல்கிசைக் கிளை தீர்மானம்

1963ம் வருடம் அக்டோபர் மாதம் 25ம் திகதி கூடிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் கல்கிசைக் கிளை கீழ்க் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளருக்கு அனுப்புள்ளது:

1. சர்வதேசிய கம்யூனிஸ்ட் இயக்கத் தத்துவ கருத்து முரண்பாடுகள் சம்பந்தமாக கட்சியின் அதிகப்படியான அங்கத்தினர்களின் அங்கீகாரமின்றி, சட்ட விரோதமாக மத்தியக் கமிட்டி அறிக்கை வெளியிட்டதை எதிர்ப்பதோடு எமது கிளை அவ்வறிக்கையை முற்ருக நிராகரிக்கின்றது.

2. சட்டபூர்வமற்ற மத்திய கமிட்டியால் "மவ்பிம" "தேசாபிமானி" "தருண லங்கா" "யுவசக்தி" முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களான பிரேமலால் குமாரசிரி எச். எம். பி. முஹிதீன், டபிள்யூ. அ. தர்மதாச, சந்தியாகு பர்ணுந்து ஆகிய தோழர்களை அப்பத்திரிகைகளின் ஆசிரியர் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு எடுத்த தீர்மானத்தை எமது கிளை நிராகரிக்கின்றது.

3. கட்சியின் காலங்கடந்த அரசியற் குழுவும், சட்ட விரோத மத்தியக்கமிட்டியால், சட்டவிரோதமாக, எந்தவித முன்னறிவித்தலுமின்றி கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களான தோழர்கள் சண்முகதாசன், பிரேமலால் குமாரசிரி ஆகியோரின் அங்கத்துவத்தைத் தடை செய்ததை எமது கிளை கடுமையாக எதிர்ப்பதோடு, அத்தீர்மானத்தைக் கண்டிக்கிறது. சட்ட விரோத அரசியற் குழுவால், சட்ட விரோதமாக எடுத்த அத்தீர்மானத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு எமது கிளை கோருகிறது:

(அ) இன்று கட்சியில் எழுந்துள்ள அரசியல் கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காகவும், கட்சியின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காகவும் இவ்வருடம் டிசம்பர் மாதம் கட்சியின் சம்மேளனத்தைக் கூட்டுமாறு எமது கிளை கோருகிறது.

(ஆ) இன்றுள்ள சட்ட விரோத மத்தியக் கமிட்டியைப் பற்றி அதிகப்படியான உறுப்பினர்களின் நம்பிக்கையின்மையால், இருவித கருத்துக்களைகயும் கொண்ட கமிட்டியினுல் சம்மேளனத்தைக் கூட்டவேண்டுமென எமது கிளை கோருகிறது.

இன்றைய கதை

## மார்க்சிஸத்திற்கு கொள்ளி!

ஸ்டாலினிஸ்ட்

என்னைக் கண்ட அந்தத் தொழிலாளி அவசரமாக ஓடி வருகின்ருன்

தனது கையிலிருந்த பத்திரிகையை விரித்து அவன் எனக்குக் காட்டுகின்ருன்.

காற்றில் நடுங்கும் மலர் இதழ்களைப் போல் அவனுடைய உதடுகள் துடிக்கின்றன. ஆனல் சொற்கள் வெளி வரவில்லை.

''என்ன தோழா?''

ஆதுரத்துடன் கேட்கின்றேன்.

''இது...... இதென்ன அநியாயம்?''

விம்மலுக்கும் விக்கலுக்கு மிடையில் சொற்கள் வெடிக்கின்றன.

''இதற்கேன் இவ்வளவு வேதனைப்படுகின்ருய்?''

''இவர்களுக்கா இந்தக் கதி? எங்கள் வர்க்கத்திற்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்த இந்தத் தியாகிகளுக்கா......?''

திரை கட்டி நின்ற கண்ணீர் சொட்டிட்டு, அவனுடைய கன்னங்களில் வடிகின்றன.

''தோழா, நான் ஒரு கதை சொல்லட்டுமா''

"என்ன, நான் ஏதோ கேட்க நீங்கள் கதை......?''

அவனுடைய முகத்தில் விரக்தியின் சாயல் படர்கின்றது.

''அவசரப்படாதே. நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்''

''இந்த நேரத்திலா கதை சொல்ல வருகின்றீர்கள்?''

''நிதானமாய்க் கேள், உனது கேள்விக்குப் பதில் சொல்ல......''

''சரி சொல்லுங்கள்''

அவனுடைய முகத்தில் ஆவல் குறி.

இரு நண்பர்கள். அவர்களுள் ஒருவன் கவிஞன்.

''உனது வாழ்க்கையில் உன்னை ஆனந்தத்தின் எல்லைக்கு அழைத்துச் சென்ற ஏதாவது ஒரு சம்பவம் உண்டா?''

என்று கவிஞனை நண்பன் கேட்டான்.

''ஏன், இல்லாமலில்லை?''

''துன்பத்தின் கோடிக்குக் கொண்டுசென்ற சம்பவம்?''

''இரு சம்பவங்களல்ல-ஒரே நாளில் நடந்த அந்தச் சம்பவம் என்னை இன்பத்தின் சிகரத்திற்குச் கொண்டு சென்ற அதே நேரத்தில் துன்பத்தின் படுகுழியில் ஆழ்த்தியது.''

''விசித்திரமாக இருக்கின்றதே, அது என்ன சம்பவம்''

''ஒரு நாள் .........''

''அகிலம் இருள் போர்வைக்குள் துயின்று கொண்டிருந்த வேளை.

''எங்கோ தூரத்திலிருந்து கீதாகானம் எழுந்து காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. வரவர அதன் நாதம் அதிகரித்துக்கொண்டு வந்தது.

''ஏகப்பட்ட குரல்கள் அக்கீதத்தைஇசைத்துக்கொண்டிருந்தன.

என்னை மறந்த நிலையில் அந்தக் கீதத்தை லயித்துக்கொண்டிருந்த நான், இன்பத்தின் கொடுமுடியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தேன். இந்த இரண்டறக் கலந்த நிலையில் என் உயிர் எனது உடலை விட்டுப் பிரிந்துவிட்டது போன்ற உணர்வு.

''ஏன் தெரியுமா?

''அவர்கள் இசைத்துக் கொண்டிருக்கும் கீதம் நம் நாட்டுத் தேசிய கீதம். அது மாத்திரமல்ல. அக்கீதத்தை இயற்றியது யார் தெரியுமா? நான்தான் அதை இயற்றினேன்.

''என்னை மறந்த லயிப்பு நிலையில் நான் இருக்கும் பொழுது...............

''என் வீட்டில் தீ பொங்கி எழுந்தது.

நான் வெளியே வந்து பார்த்தபொழுது...............

''நான் இயற்றிய தேசியகீதத்தைப் பாடிக்கொண்டே எனது வீட்டிற்குத் தீ வைத்துக் கொண்டிருந்தார்கள் பதினைந்திருபது கொள்ளைக்காரர்கள்.''

என்று கவிஞன் கூறினுன்.

''என்ன கொடுமை''?

என்று, என்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தத் தொழிலாளி வெதும்பினுன்.

''தோழா! இதுதான் இன்று நடக்கின்றது. மார்க்சிஸம் என்ற சொல்லை உச்சாடனம் செய்து கொண்டே சில தத்துவப் புரட்டர்கள், வர்க்கத் துரோகிகள், சுயநலமிகள், சோம்பேறிகள், கும்பகர்ணர்கள், கருங்காலிகள், முதலாளித்துவத்தின் கைக்கூலிகள். கயவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மார்க்சிஸத்திற்கும் அதைக் கட்டி வளர்க்கப் போராடும் தியாகிகளுக்கும் கொள்ளி வைக்கின்ருர்கள்''.

''வரலாறும், தொழிலாளி வர்க்கமும் கொடுக்கவிருக்கும் தண்டனையிலிருந்து இத்துரோகிகள் எவ்விதத்திலும் தப்ப முடியாது.''

அவனுடைய கண்கள் ஒரு கணம் என்னை நிலைகுத்திநோக்கின.

தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி நிச்சயம் என்று அவனுடைய கண்கள் சபதம் கூறின.

தென் - வியட்நாமில்

# ஆள் மாறினலும் ஆட்சி மாறவில்லை

## அடக்குமுறை நீடிக்க அமெரிக்காவின் ராணுவப் புரட்சி எனும் சதி

பிற்போக்காளன், அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடி டியம்மின் ஆட்சி, இடிபட்ட சுவர்போல் வீழ்ந்தது. என்ருலும், தென் வியட்நாம் மக்களின் நிலையில் மாற்றம் இல்லை; அவர்களின் இலட்சியங்களும் முன்னேறவில்லை; போராட்டமும் ஓயவில்லை.

கடந்த சில மாதங்களில் அமெரிக்க—டியம் கும்பலின் காட்டுமிராண்டித் தர்பார் கட்டுமீறி நடந்தது. மத ஒதுக்கு முறையால் தென் வியட்நாம் அல்லோல கல்லோலப் பட்டது. டியம் ஆட்சி நடாத்திய அத்தனை அட்டூழியங்களும் அமெரிக்காவின் ஆக்ஞையால், அல்லது ஆசியுடன் நடைபெற்றவை. ஒதுக்கு முறை மக்களின் எதிர்ப்பை மேலும் கிளறியதோடு, உலகப் பொதுக் கண்டனத்தையும் அமெரிக்காமீது திருப்பிவிட்டதால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அறியாப் பிள்ளை வேஷமிட்டு, 'அத்துமீறிய செய்கைகளுக்கு' டியமைமக் கண்டித்து அறிக்கை விடுத்தனர். அதேசமயம், கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுக்கு எதிராக நடவடிக்கை என்றபேரில், மக்களுக்கெதிராக சகல விதமான நாசகார ஆயுதங்களையும் உபயோகித்து, இன ஒழிப்பு யுத்தம் நடத்தினர்.

டியம் ஆட்சி ஆட்டம்கண்டதால், தொடர்ந்தும் தென் வியட்நாமில் தங்கள் புதிய காலனி ஆதிக்கத்தை நீடிக்க டியம்மை வைத்து இயலாது என்று உணர்ந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அவரைப் பலியிடத் திட்டமிட்டனர். அதன் விளைவுதான் டியம்மின் வீழ்ச்சி.

இரு மாதங்களுக்கு முன்பே சீனக் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர், மாமேதை தோழர் மாஓ, வியட்நாம் பற்றிய தமது அறிக்கையில், தீர்க்கதரிசனம்போலச் சுட்டிக் காட்டினர்: ''டியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒரு விஸ்வாசமான அடிவருடி. ஆனல், ஒரு அடிவருடி எத்தனை விஸ்வர்சமானவனுக இருந்தபோதிலும். அவன் தனது உபயோக வாழ்வைக் கடந்துவிட்டால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, யுத்தக் கொள்கைகளைக் கொண்டு செலுத்துவதற்கு அவன் ஒரு இடையூருக மாறினல், அவனை உதறித்தள்ள, அவனுடைய ஸ்தானத்தில் மற்ருெரு அடி வருடியை இருத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தயங்காது. தென்-கொரியாவில் சிங்மன்ரீயின் கதி இதற்கு ஓர் உதாரணம்.''

தோழர் மாஓ அன்று கூறியது இன்று நூற்றுக்கு நூறு மெய்யாகிவிட்டது.

டியம்மைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய ரனுவக் கும்பல், தனது முதல் கடமை (டியம்மைப் போலவே) கம்யூனிஸ்டுகளை எதிர்த்து யுத்தம் நடத்துவதுதான், அதாவது, மக்களுக்கெதிரான அடக்குமுறையையும், நாசயுத்தத்தையும் தொடர்வதுதான் எனப் பிரகடனம் செய்துள்ளது.

டியம் ஆட்சியினல் சிறையிடப்பட்ட ஏராளமான பிக்குகளும், மாணவர்களும் ஏனையோரும் கம்யூனிஸ்டுகள் என்ற பெயரில் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் உடனடியாகப் புது ஆட்சியை அங்கீகரிக்கவும், பொருளாதார, ராணுவ உதவியைத் தொடர்ந்து அந்த ஆட்சிக்கு வழங்கவும் விரைந்துள்ளது.

ஏகாதிபத்திய செய்தி ஸ்தாபனங்களும், எம் நாடு உட்பட சகலமுதலாளித்துவ நாடுகளிலுமுள்ள பிற்போக்குப் பத்திரிகைகளும் டியம் ஆட்சியுடன் தென் வியட்நாம் பிரச்சினை தீர்ந்துவிட்டதாகப் பிரசாரம் செய்யப் படாத பாடு படுகின்றன.

ஈழத்துப் பாட்டாளி வர்க்கமும், சகல மக்களும் பெருங் குரலெடுத்து, ''அமெரிக்க ஏகாதிபத்தியமே தென் வியட்நாமை விட்டு வெளியேறு!'' என்று தொர்டர்ந்து பெருங்குரலெழுப்பவேண்டும்.

---

(உங்கள் நிதியை இத்துடன் இணைத்து அனுப்பவும்.)

### தொழிலாளி வளர்ச்சி நிதி

இத்துடன் எனது அன்பளிப்பாக ரூ ....சதம்........ இணைத்துள்ளேன்.

..........................

கையொப்பம்.

பெயர் ... .............. ..........................................

விலாசம் ..... ...............................................

---

கடந்த வாரம்முதல் ''தொழிலாளி'' வாரஇதழாக மலர்கிறுன்.

அவன் ஆற்றவேண்டிய தொண்டு அளப்பரியது.

நாலு திக்கிலும் அவனை எதிர்ப்பவர்கள் பலர். கண்டிப்பவர்கள் மிக மிகச் சிலர். பாராட்டுபவர்களோ அநேகம் அநேகமானவர்கள்.

இதுநாள் வரை, ஈழத்திருநாட்டுத் தொழிலாளர்களின் உண்மையான, உறுதிமிக்க போராளியாகப் பணியாற்ற ஓர் பத்திரிகை இல்லாதிருந்த குறையை ''தொழிலாளி'' நீக்கிவிட்டான்.

இன்றைய ஈழத்து அரசியல் சூழலில் ''தொழிலாளி''யின் வளர்ச்சியும், வெற்றியும் ஈழத் திருநாட்டுத் தொழிலாளர்களின் மிகப்பெரும் சாதனையாகும்.

''தொழிலாளி'' யினதும், சிங்களப் பத்திரிகையான ''கம்கருவா' வினதும் வளர்ச்சிக்கு நாங்கள் பல திட்டங்கள் வகுத்துள்ளோம். அதில்ஒன்று, தொழிலாளி வளர்ச்சி நிதி.

வாரத்திற்கு ஒரு ரூபாயோ அல்லது அதற்கு மேலோ தர விரும்பும் சகல தோழர்களும் தமது பேராதரவை நல்க வேண்டுகிறேம்.

ஒரு ரூபாய், உங்களின் ஒரு நாள் செலவின் மிகச் சிறிய பகுதியாகும்.

புதுமை நோக்கும், புரட்சிப் போக்குமுள்ள நாம், இந்த சொற்ப நிதி உதவியைத் தர ஆயிர மாயிரமாக முன் வர வேண்டும்.

உங்கள் நிதியை இன்றே அனுப்பித்தாருங்கள். நிதி தருவோரின் பட்டியல் வாரா வாரம் ''தொழிலாளி''யில் வெளியிடப்படும்.

நிதி அனுப்பப்படவேண்டிய முகவரி.

மானேஜர்,
'' தொழிலாளி ''
123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.

---


யுவசக்தி

யுவசக்தி

யுவசக்தி

ஈழத்திருநாட்டில் வெளிவரும் ஓரே வாலிபர் தமிழ் பத்திரிகை.

வாலிபர்களின் ஏகப்பிரதிநிதியாக - தேசிய ஐக்கியத்தின் உருவாக, மார்க்ஸிஸ-லெனினிஸத்தின் தத்துவ ஒளியாக, நவீன திரிபுவாதிகளின் வைரியாக, செஞ்சட்டை வீரனுக வெளிவருகிறது.

9, டிமெல் வீதி
கொழும்பு-2

விலை சதம்-15


---

## மத்தியக் கமிட்டி முடிவுகளுக்கு கண்டனம்

### யாழ். கம்யூனிஸ்ட் மாவட்டக் கமிட்டி தீர்மானம்

[கடந்த 2-11-63ல் கூடிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டக் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இங்கு வெளியிட்டுள்ளோம்]

(அ) 1960 டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற ஆருவதுகட்சிக் காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட கட்சி சட்ட திட்டத்தில் கூறியபடி, இரண்டாண்டுகளுக்குள் கட்சிக் காங்கிரஸைக் கூட்டத் தவறியதையிட்டும், செப்டம்பர் 1962ல் இது சம்பந்தமாக அரசியல் கமிட்டி எடுத்த தீர்மானத்தை அமுல்படுத்தாதையிட்டும் இக் கமிட்டி கவலைப்படுகிறது.

(ஆ) சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் சம்பந்தமான அறிக்கையொன்றினைப் பொதுமக்களுக்கு விடுக்குமுன், கட்சியின் சாதாரண அங்கத்தினரைக் கலந்தாலோசிக்கத் தவறியதையிட்டும் கவலைப்படுகிறது.

காங்கிரஸைக் கூட்டுவதில் தாமதம் காட்டுவதாலும், கட்சி அங்கத்தினரை இத்தகையமுக்கிய விஷயத்தில் கலந்தாலோசிக்காது, அவசரமாக அறிக்கை விடுத்ததினின்றும், ஜனநாயக மத்தியத்துவக் கொள்கைக்கு விரோதமாக மத்தியக் கமிட்டி நடந்து கொண்டது மட்டுமின்றி, கட்சியிலுள்ள உள் தகராறுகள் அம்பலத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

தோழர்கள் சண்முகதாஸனையும், பிரேமலால் குமாரசிரியையும் முதலில் தற்காலிகமாக நிறுத்திவைத்துவிட்டு, பின் விளக்கம் கூறும்படி கேட்டமை, நிலைமையை அதிகம் மோசமடையச் செய்துள்ளது.

(அ) சர்வ தேசிய இயக்கம் பற்றி வெளியிட்ட அறிக்கையை வாபஸ்பெறும்படி இக் கமிட்டி, மத்தியக் கமிட்டியை வேண்டுகிறது.

(ஆ) 7வது காங்கிரஸைக் கூட்ட, இரு பகுதியினரையும் கொண்ட ஒகு கமிட்டியைத் தெரிவுசெய்து, அவர்களிடம் அப்பொறுப்பை விடும்படி கோருகிறது.

(இ) பிரேமலால் குமாரசிரியை தற்காலிகமாகவும், என். சண்முகதாஸனை நீக்கவும் செய்த முடிவுகளை உடனடியாக வாபஸ் பெறும்படி இக் கமிட்டி கேட்டுக் கொள்கிறது.

---

### 'தேசாபிமானி'யே

=2ம் பக்கத் தொடர்ச்சி

திய மத்தியக் கமிட்டி பெரும்பான்மை அங்கத்தவர்கள் நாம் வளர்த்த தேசாபிமானியை பலரின் தியாகங்களை அரவணைத்துக் கொண்டு வளர்ந்த தேசாபிமானியை, இன்றுதொழிலாள துரோகக் கும்பல் கையில், கட்சி விஸ்வாசமற்ற சுயநலக் கும்பல் கையில் ஒப்படைத்திருப்பது வேதனைக் குரியதே.

மத்தியக் கமிட்டி சர்வாதிகார முறையில் எங்களைத் தூக்கி எறிந்தாலும், எம்மைத் தொழிலாள வர்க்க இயக்கத்திலிருந்தும் பிரித்துவிட முடியாது. நாம் இந்த நாட்டின் இலட்சக் கணக்கான மக்களின் இதய பேரிகையான தொழிலாளியின் மடியிலே வீழ்ந்துள்ளோம். நாளைப் புத்துலகம் சமைக்கும் தொழிலாளிகளும் நாமும் ஒன்றிணைந்து தொழிலாளியின் வளர்ச்சிக்கு அயருது உழைப்போம் என உறுதி பூண்கிறேம்.

கையொப்பம்:
நீர்வை பொன்னையன்
''சத்தியன்''
சிவராமன்
இளங்கீரன்
''தம்பி''
''பாலன்''
ரகுநாதன்
குமாரலிங்கம்

(தேசாபிமானி ஆசிரியர்க் குழுவில் அங்கம் வகித்தவர்கள்.)

---


''இலங்கை இந்தியர் பிரச்னை''

தீர்வுகாண வழி

எழுதியவர்:
எஸ். நடேசன்

கிடைக்குமிடம்:
சாந்தி வெளியீடு
20, ராஜா வீதி
மாத்தளை.

# யூ.என்.பியே, யாரை ஏமாற்றுகிறாய்?

## "பத்திரிகை சுதந்திர"க் கூப்பாடு ஏகபோகிகளுக்கா, மக்களுக்கா?

கடந்த 3-ம் தேதி, கொழும்பிற் கூட்டம் போட்டு 'பத்திரிகை சுதந்திரத்தைக்' காப்பாற்ற உயிரைக் கூட விடப்போவதாக யூ. என். பி. கும்பல் கூப்பாடு போட்டது.

பத்திரிகைகள் ஏகபோக உடமையாக இரு ஸ்தாபனங்களின் கையிலிருப்பதும், பிற்போக்கு, அந்நிய சார்புக் கொள்கைகளையே வெளியிடுவதும், போதாதற்கு, செய்திகளை முற்றுகத்திரித்தும், தலையங்கங்கள் மூலமும், செய்திகளை இருட்டடிப்புச் செய்தும் சகல விதங்களிலும் பிற்போக்கு முதலாளித்துவ, ஏகாதிபத்திய நலன்களுக்குச் சேவை செய்தும் வருவது இந்நாட்டில் 'பத்திரிகைச் சுதந்திரத்தை' செயலளவில் இல்லாமல் செய்து வருகிறது.

பிற்போக்கு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு யூ. என். பி, இப்பத்திரிகை ஏகபோகங்களுடன் ஒன்றரக் கலந்த நலன்களைக்கொண்டியங்கிவருகிறது. எப்போதும், விசேஷமாகத் தேர்தல் காலங்களில், ஏகபோக ஏரிக்கரை, டைம்ஸ் குரூப் பத்திரிகைள் யூ. என். பிக்காக ''உயிரை விட்டன.'' இப்போது யூ. என். பி. தமது நண்பர்களுக்காக ''உயிரை விடப்''போகின்றதாம். இது அதிசயமல்ல! ஏனெனில், யூ. என். பி. பத்திரிகைச் சுதந்திரத்தையல்ல, ஏகபோகத்தையே பாதுகாக்க முயல்கின்றது.

ஏகபோகத்தின் காரணமாக நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை நாசமாக்கி, பத்திரிகைத்தர்மத்தையும்மீறி, கீழ்த் தரத்தின் எல்லைக்குச் சென்று யூ. என். பி. பிற்போக்குக் கும்பலுக்கு ஏகபோகப் பத்திரிகைகள் ஆதரவு தந்தன. இதனுல், கடந்த இரு பொதுத் தேர்தல்களிலும் ஈழத்து மக்கள் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேண, ஏகபோகப் பத்திரிகைகளை அரசாங்கம் கையேற்று, சுதந்திர கூட்டுத் தாபனமொன்றிற்குப் பாரம் கொடுக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிகாரம் வழங்கினர்.

> "இவ்வாரம்"
> என்ற இப்பகுதி,
> ஈழத்து நிகழ்ச்சிகளை
> விமர்சிக்கும்

இதே பத்திரிகைகள் தொழிலாளர்களின் போராட்டங்களை நசுக்கக்கேடுகெட்ட பிரச்சாரங்கள் நடத்தின. ஒவ்வொரு வேலைநிறுத்தங்களிலும் முதலாளிகளுக்கு உறுதுணையாக நின்று இப்பத்திரிகைகள் கருங்காலித்தனம்செய்தன. இவைகளை முறியடிக்கவே மக்கள் சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்தனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்திலும் பின்னர் இரண்டு மூன்று சிம்மாசனப் பிரசங்கங்களிலும் பத்திரிகை ஏகபோகத்தைத் தகர்த்து, ஏரிக்கரை, டைம்ஸ் குரூப் பத்திரிகைகளை சுதந்திரமான அரசாங்கக்கூட்டுத்தாபனமொன்றிடம் ஒப்படைப்பதாக வாக்குத் தந்த ஸ்ரீ லங்கா அரசாங்கம், இது நாள்வரை தமது கொள்கையை செயல்படுத்தவில்லை. ஏகபோக சார்பாளரான சாம் பி. சி. பெர்னுந்து நீதி மந்திரியாக இருந்தபோது, இக் கொள்கைக்குக் குழிபறித்து, ஏகபோகத்தைப் பலப்படுத்த மீண்டும் மீண்டும் மசோதாக்களைப் பிரேரித்தார். இவை அரசாங்க பாராளுமன்றக் கோஷ்டியால் நிராகரிக்கப்பட்ட பின்னர், திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டார நாயக்கா அதே வழியைப் பின்தொடர்ந்தார். அவருடைய பிரேரணையும் நிராகரிக்கப்பட்டது.

காலம் சென்ற திரு. ஏ. பீ. பெரேரா நீதி மந்திரியாகிப் பத்திரிகை தேசியமய விஷயத்தைப் பொறுப்பேற்ற பின்னர், பத்திரிகைக் கமிஷன் விசாரணை நடத்த நியமிக்கப்பட்டது. கமிஷனின் அதிகார வரம்பிற்குள் ஏகபோக ஏரிக்கரை, டைம்ஸ் குரூப் பத்திரிகைகள்விடப்பட்டன. யூ.என். பியால் இதை சகிக்க முடியவில்லை. எனவே, தனது வயிற்றெரிச்சலை கிளப்புகிறது.

பத்திரிகை ஏகபோகத்தைத் தகர்ப்பதிலும், பத்திரிகைச் சுதந்திரத்திலும் நாட்டமுடையவர்கள் கமிஷனுக்கு நியமிக்கப்பட்டதையே தாம் எதிர்ப்பதாக யூ. என். பி. கூறுகிறது. யூ. என். பி—ஏரிக்கரை டைம்ஸ் தொடர்புகளின் மர்மங்களை அம்பலப்படுத்தாத நபர்கள் தாம் கமிஷனில் இருக்கவேண்டும் என்பது யூ. என். பி. யின் 'சுதந்திரம்'பற்றிய அபிப்பிராயமாகும். கமிஷனின் தலைவர் திருமதி தேஜா குணவர்த்தனுவை சீனுவின் ஆதரவாளர் என்பதற்காகக் கமிஷனில் நியமிக்கக் கூடாது என்பது யூ. என். பி. வாதம். சீனுவை எதிர்க்கும் பிற்போக்காளர்கள் கமிஷனுக்கு நியமிக்கப்படுவதில் யூ.என். பிக்குத்தான் நன்மை, மக்களுக்கல்ல. இதை மக்கள் உணர்ந்துள்ளதைக் கடந்த வார யூ. என். பி. 'பத்திரிகைச் சுதந்திரக்' கூட்டத்தினைப் பார்த்தவர்கள் இலகுவில் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

## தொழிலாள வர்க்கத்தின் சபதம்

( அ. ந. கந்தசாமி )

செங்கொடியின்! மீதாணை தியாக வீரர்  
செவ்விரத்த மீதாணை! மார்க்சோ டெங்கல்ஸ்  
இங் கெமக்குத் தந்திட்ட இனிய கொள்கை  
இதயப்பூண் மீதாணை! புரட்சி கண்ட  
தங்க நிகர்த் தலைவனந்த லெனின்மீதாணை!  
தரணியிலோர் உவமையிலா ஸ்டாலின் என்னும்  
சிங்கமிசை ஆணை! இந்த உலகம்தன்னைச்  
சீருறுத்திப் புது அச்சில் வார்க்க வந்தோம்.

வாழுகின்ற லெனினென்று வையம் போற்றும்  
மா மனிதன் மாசேதுங் மீதிலாணை!  
சூழுமெட்டுத் திசைகளுமே நடுநடுங்க  
சுரண்டற்பேய் புரண்டுவிழ நாம் திரண்டு  
சூழுரைப்போம்! முழுஉலகும் புரட்சித்தீயைச்  
சுடர்விட்டுச் சுடர்விட்டிங் கெரியக்காண்போம்!  
பாழுமுத லாளித்துவம் வெந்துசாகப்  
பயமறியாப் போராட்டம் செய்தேதீர்வோம்!

பாட்டாளி வர்க்கம் நாம் எமது கையின்  
பாரவிலங் கல்லாமல் நாமிழக்க  
நாட்டினிலே யாதுமிலை! ஆனுலிங்கு  
நாம் பெறுதற் கோர்புதிய லோகம் முற்றும்  
காத்திருக்கு! இவ்விதியைப் புரிந்துகொண்ட  
கார்ல்மார்க்ஸின் வாரிசு நாம்! பொதுவுடமை  
பூத்திடுமப் புதுஉலகம் விரைந்து காணப்  
புவி எல்லாம் கேட்டிடவோர் சபதமேற்போம்!


தொழிலாள வர்க்கம் நாம்! உலகமெல்லாம்  
தொலை தொலைவில் வாழ்ந்தாலும் ஒருவர்க்கம்நாம்!  
இழிவான இன பேதம், தேசபேதம்  
இவை எல்லாம் எமக்கில்லை! ஒருவர்க்கம் நாம்!  
பழிகார முதலாளி முறையைத் தீர்க்கும்  
பணி ஒன்றே எம்பணியாம்! அப்பணிக்காய்  
எழுவீரே! உலகத் தொழிலாள மக்காள்!  
இவ்வுலகம் முழுவதுவும் இங் கெமதே என்போம்!

இப்பணியை நாமிங்கு புரியும்போது  
இருபக்கத் திருந்தெமக்கிங் கெதிர்ப்புத்தோன்றும்!  
எப்போதும் மார்க்சீயம் பேசிவந்த  
எத்தர்கள் இப்பொழுது திரிபுவாதக்  
குப்பையிலே புரளுகிறார் டிட்டோ என்னும்  
குருநாதன் காலடிகள் பற்றிக்கொண்டு!  
அப்பப்பா! இக்கொடுமை இக்கணமே  
அகிலமெலாம் துடைத்தெறியச் சபதமேற்போம்!

மறுபுறத்தில் அமெரிக்க வெறியர் நின்றார்  
மன்னுலகம் தம்முலகம் என்று சொல்லி!  
நெறியற்ற இன்னவர்கள் துள்ளல் கண்டெம்  
நேசரிலும் சிலர் பயத்தால் நடுங்குகின்றார்!  
நெறி பிறழா மார்க்ஸ்வழியின் மைந்தர் நாங்கள்  
நீசரிவர் தீமைப் பூண்டழிக்கும் போரை  
சரியவிடோம் ஒரு போதும் என்று சொல்லிச்  
சண்டாளர்க் கெதிராகச் சபதமேற்போம்!

உலகத்தின் மூலைஎலாம் உரிமைப்போரை  
உக்கிரமாய் நடத்துகிறார் எங்கள் தோழர்!  
அலபாமா வீதியிலே எங்கள் தோழன்  
அடிமைநிலை ஒழிப்பதற்காய் எழுந்துவிட்டான்!  
தலைகுனிந்து நின்றதென் னமரிக்கா இன்று  
தலை நிமிர்த்து விட்டதடா! ஆபிரிக்கா  
விலையற்ற சுதந்திரத்தின் பாட்டிசைக்கும்!  
வீதிஎலாம் விண்ணெல்லாம் புரட்சிபாராய்!

தியாகமெனும் செவ்வாற்றின் கரையில் நின்று  
தியாகிகளின் செந்நீரைக் கையில் அள்ளி  
பயமற்ற பாட்டாளி வர்க்கமின்று  
பாரறியச் செய்யும் ஒரு சபதம் கேளீர்!  
ஜயமடையும் வரையும் நாம் போர் நிறுத்தோம்  
சகத்தினை நாம் விடுவித்தல் திண்ணம் திண்ணம்!  
பயமடைந்தோர் இதை எதிர்த்து நிற்பாராயின்  
பாவம்! அவர் அழிவதுவும் திண்ணம் திண்ணம்!



### பயனில்லா பாவ யாத்திரை

தமிழரசுக் கட்சியின் பாவ யாத்திரை ஒன்றரைவார ஓய்வுக்குப்பின் கடந்தவாரம்மீண்டும் ஆரம்பமாகியது. ஒன்றன் பின் ஒன்ருகப் போராட்ட ''ஸ்டண்டு''கள் செய்து, தோல்விகண்டு, மக்களிடையே தமக்கு அவநம்பிக்கை வளர்வதைக் கண்ட தமிழரசார், கடைசியில் தொடங்கிய புதிய ஸ்டண்டு இது.

'இயக்கம்' இல்லையேல் கிராக்கி குறையும்; மக்கள் எதிர்பார்க்கும் பலன் இல்லையேல் அதிருப்தியும் அவநம்பிக்கையும் வளரும் என்பது தமிழரசார் தமது அடுத்தடுத்த ஆறு வருட 'புஸ் ஸ்டண்ட்' அரசியலில் கற்ற 'மேலான' பாடமாகும்.

பாவ யாத்திரை, பின் பகிஷ்கரிப்பு; பகிரிஷ்கரிப்பு, பின் பாதி யாத்திரை. இவைகளுடன் ஒத்திவைப்பும், துவக்க விழாக்களும். இவை தமிழ் மக்களின் மானத்தை வாங்குகின்றன.

-குமாரதாஸன்

பதிப்பித்து வெளியிடுபவர் ஹசன் மொஹிதீன் பக்கீர் மொஹிதீன், 123, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. அச்சிட்டது: ஆர். ஜே. ஆர். அச்சகம், 90/1 கியூ வீதி, கொழும்பு 2,